பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமான
✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22 நவீன சந்தை, யாழ்ப்பாணம்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ் வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடி 25 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 25 ( 09 08 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 152

நேற்று பல்கலைக்கழக மாணவர்கள்

## யாழ் நகரக் கொமாண்டர் அலுவலகம் நோக்கி பேரணி

### மாணவர்பிரதிநிதிகளுடன்பிரிகேடியர் காலோன் பேச்சு

யாழ்ப்பாணம், ஆக 9
யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பித்த இந்தப் பேரணி யாழ் நகரக் கொமாண்டர் அலுவலகம் நோக்கிச் சென்றது. அங்கு மறியலும் இடம்பெற்றது.

இந்தியப் படையினரால் விசாரணைக்காக கொண்டுசெல்லப்பட்டுஒருவார காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக்கழக இரண்டாம் வருட உயிரியல் விஞ்ஞானபீட மாணவன் செல்வன் தவராசாவை விடுதலை செய்யக் கோரியே இந்தப் பேரணியும் மறியலும் நடைபெற்றன.

இதுசம்பந்தமாக நேற்று வகுப்புக்களைப் பகிஷ்கரிப்பது என்றும் காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் கூடி அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதென்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டத்தில் ஆர்ப்பாட்டப் பேரணியும் மறியலும் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத்தீர்மானத்தை அடுத்து காலை 10 மணியளவில் பல்கலைக்கழகத்தில் இருந்து பேரணி (6 ஆம் பக்கம் பார்க்க)

★ தீவுப்பகுதி போக்குவரத்திற்கு

## 2 கோடி ரூபா செலவில் 2 மோட்டார் லோஞ்சுகள்

யாழ்ப்பாணம் ஆக 9
தீவுப்பகுதிக்கான கடற் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவதற்கென இரண்டுகோடியே பத்து இலட்சம்ரூபா செலவில் இரண்டு 'மோட்டார் லோஞ்'' சுகள் (சிறிய கப்பல்கள்) கட்டப்பட உள்ளன.

ஒவ்வொன்றிலும் சுமார் 180 பயணிகள் பயணம் செய்யக்கூடியதாக இவை அமைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் அரச அதிபரின் பெருமுயற்சியினால் இது கூடியுள்ளது.

வெளிநாடுகளின் நிதி உதவியுடனேயே இந்த 'மோட்டார் லோஞ்' கட்டும் வேலைகள் நடைபெறவுள்ளன.

இவற்றை அமைப்பதற்கான வேலையை கொழும்பில் உள்ள கப்பல் கட்டும் நிறுவனமான ''டொக்யாட் லிமிட்டெட்'' அமைப்பு டெண்டரில் எடுத்துள்ளது.

இந்த இரண்டு மோட்டார் லோஞ்சுகளையும் எட்டு மாதங் (6 ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டிலிருந்து புறப்பட்ட 50 யார் தூரத்தில் சூடு!

### எஸ். பியும் சாரதியும் அந்த இடத்திலேயே மரணம்

யாழ்ப்பாணம், ஆக 9
காலைஞ்சென்ற யாழ். பொலீஸ் அதிபர் இராஜேஸ்வரன் அவரது வீட்டிலிருந்து காரில் புறப்பட்டுச் சுமார் 50 யார் சென்றதும், கார் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது.

அதனால் அவரும் கார்ச்சாரதியும் அந்த இடத்திலேயேகொல்லப்பட்டனர்.

நேற்று நடந்த விசாரணைகளைத் தொடர்ந்து இத்தகவல்கள் தெரியவந்தன.

ஞாயிற்றுக்கிழமை மாலையில் இனம் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். பொலீஸ் அத்தியட்சகர் பி. இராஜேஸ்வரனின் சடலம் விசாரணைகளின் பின் நேற்று அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள பொலீஸ்ப் பகுதியில் அவரது மரணம் சம்பந்தமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

டாக்டர் ஈஸ்வரராஜா பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டார். யாழ். நீதிவான் திரு. யோக (6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைக் கிராமங்களில் பேரணி, மறியற் போர்

— திருமலை மாவட்ட செய்தியாளர் —

திருகோணமலை, ஆக.9
திருகோணமலை ஆறும் சட்டை, இக்பால் நகர், நிலாவெளி, கோபாலபுரம், கும்புறுப்பிட்டி, குச்சவெளி, திரியாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்கள் நாளாந்தம் பேரணிகளையும், ஆர்ப்பாட்டங்களையும், மறியல் போராட்டங்களையும் நடத்திவருகிறார்கள்.

இக்கிராமங்களில் அடிக்கடி தேடுதல் வேட்டைகளும், சோதனைகளும், திடீர் திடீரென்று ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்துவதும், இதனால் வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்படுவதும் அடிக்கடி நிழ்கின்றன.

தேடுதலின் போது பலர் கைதுசெய்யப்படுகின்றனர். சிலர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இவற்றை நிறுத்தக் கோரியும், இச் செயல்களுக்கு ஆட்சேபம் தெரிவித்துமே மக்கள் சாத்வீகப் போராட்டத்தை நடத்திவருகின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளினால் மக்கள் இன்னல்களுக்கு உள்ளாவதுடன் தொழில் செய்பவர்கள் கூட தொழிலுக்குச் செல்ல முடியாமல் முடங்கிக் கிடக்கின்றனர் என்று முறைப்பாடு செய்யப்படுகிறது.


இப்பகுதியிலுள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயம், சிறுபயிர்ச் செய்கை, மீன்பிடி போன்ற தொழில்களைச் செய்து வருகின்றனர். இத்தொழில்களைச் சீரா (6 ஆம் பக்கம் பார்க்க)

## போக்கு வரத்துத் தடை!

யாழ்ப்பாணம், ஆக. 9
யாழ். செயலகத்தை அண்டிய கண்டி வீதிப் பகுதியில் நேற்று நண்பகல் சிலமணி நேரம் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய மறியலினாலேயே இந்தத் தடை ஏற்பட்டது.

சுமார் 11.30 மணிக்கு ஏற்பட்ட இத்தடை 2மணியளவில் நீங்கியது. (உ-சு-9)



சுமார் ஒரு வருட இடைவெளியின் பின்னர் கொழும்பு யாழ். பிரயாணிகள் ரயில் சேவை கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றது.

கொழும்பு செல்லும் ரயில் யாழ் ரயில் நிலையத்தில் நின்றவேளை எடுக்கப்பட்ட படத்தையும்—

பயணச் சீட்டுப் பெறுவதற்காக பயணிகள் வரிசையில் நின்றபோது எடுக்கப்பட்ட படத்தையும் இங்கே காணலாம்.

(படங்கள்:- அகில்ராஜ்)

## வடமராட்சி கிழக்கில் தேடுதல் தொடர்கிறது

### கடல் ரோந்தும் ஆரம்பம்

தாளையடி, ஆக 9
வடமராட்சி கிழக்கில் இராணுவத்தினர் தொடர்ந்தும் கனரக வாகனங்கள் சகிதம் தங்கிநின்று தேடுதல்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வீதிகளில் டாங்கிகளில் இராணுவ ரோந்துகளும் நடைபெற்று வருகின்றன.

சில இடங்களில் ஆயுதங்களைத் தேடி குழிகள் வெட்டப்பட்டுத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வடமராட்சி கிழக்கில் உள்ள கேவில், வண்ணுங்குளம் ஆகிய இடங்களில் இராணுவத்தினர் தங்கிநின்று தேடுதல்களை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை — வடமராட்சி கிழக்கில் கடற் பிரதேசத்திலும் இராணுவரோந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சில சமயங்களில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கடலில் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

இயந்திரப் படகுகளிலே இராணுவரோந்து இடம்பெற்று வருகின்றது. (அ-144)

## அதிக கொலைகள் மாத்தறையில்!

கொழும்பு, ஆக 9
தென் இலங்கையில் இடம்பெறும் அரசியல் கொலைகளில் மாத்தறை முதலிடம் வகிக்கிறது.

இந்திய – இலங்கை அமைதி உடன்பாடுசைச்சாத்திடப்பட்டதில் இருந்து இதுவரை தென் இலங்கையில் 148 அரசியல் கொலைகள் இடம் பெற்றன.

இவற்றில் மாத்தறையில் மட்டும் 72 அரசியல் கொலைகள் இடம் பற்றன.

(அ-எ)

பயங்கரவாத ஒழிப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட கையோடு

# 154 விடுதலை புலிகள் தமிழகத்தில் கைது!

## தலைமை அலுவலகமும் நேற்று மூடப்பட்டது

சென்னை, ஆகஸ்ட் 9
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் 154 பேர் நேற்றுத் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்,

சென்னை அடையாறு இந்திரா நகரில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகமும் இந்திய அதிகாரிகளினால் நேற்று மூடப்பட்டது.

பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பான "சார்க்" அங்கத்துவ நாடுகளின் பரஸ்பர ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்ட கையோடு தனது நாட்டில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளைக் கைது செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்று சென்னையில் 67 போராளிகளும் மதுரையில் 78 போராளிகளும் தமிழகத்தின் மற்றைய இடங்களில் 9 போராளிகளும் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சென்னையில் கைது செய்யப்பட்ட போராளிகள் அனைவரும் மெட்ரோபொலிட்டன் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரையும் இம்மாதம் 22 ஆம் திகதி வரை காவலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை சென்னை நகரில் உள்ள தமது தலைமையகத்தை இந்திய அதிகாரிகள் மூடிவிட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர் என்று பி. பி. ஸி நேற்றிரவு அறிவித்தது.

சென்னையில் உள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர் சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு), அவரது உதவியாளர் ரஹீம் ஆகியோர் ஏற்கனவே திருவான்மியூரில் ஒதுக்குப்புறமாகவுள்ள வீடொன்றில் வீட்டுக்காவலில்வைக்கப்பட்டிருப்பது தெரிந் (6 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் போட்டியிட ஜே. ஆரிடம் வற்புறுத்து

கொழும்பு, ஆக 9
ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடும்படி செல்வாக்கு மிக்க ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை நெருக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் திரு ஜெயவர்த்தன இந்த விடயம் குறித்து தீர்க்கமான முடிவு எதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதில்லை என்று திரு. ஜெயவர்த்தன தீர்மானிக்கும் பட்சத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய ஜனாதிபதி வேட்பாளர் இம்மாதம் நடுப்பகுதியில் தெரிவு செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எண்பது உறுப்பினர்கள் கொண்ட ஐ. தே. க. காரியக் கமிட்டிக்குழு புதிய ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யும். (உ-எ)

### முச்சந்தி முரளி



தீவுப்பகுதிப் பயணிகளுக்கு நல்ல செய்தி தான், ஆனால் கைக்கு எட்டியது வாய்க்குஎட்ட வேணும் என்டது தான் எங்கடை விருப்பமும் ...

## கைதிகளுக்கு எதிராக இரகசிய இயக்கம்!

### தேசபக்த அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஆக. 9
சிறையில் உள்ள பாதுகாப்பற்ற அரசியல் கைதிகளுக்கு எதிராக இரகசிய இயக்கம் ஒன்றை அதிகார பூர்வ வட்டாரங்கள் நடத்தி வருகின்றனர்.

கொழும்பு நியூமகசின் சிறையில் உள்ள 'தேசபதி அமைப்பைச் சேர்ந்த அரசியல் கைதிகள்' இப்படிக் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

இதுதொடர்பாக அவர்கள் விடுத்த அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருப்பதாவது:

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் அண்மையில் (6-ஆம் பக்கம் பார்க்க)

## திரும்பினர்

தாளையடி, ஆக 9
வடமராட்சி கிழக்கில் தங்கியிருந்த இந்திய செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர் திரும்பிச் சென்று விட்டனர்.

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையின் ஒரு பகுதியில் அவர்கள் தங்கியிருந்து கடமைகளை மேற்கொண்டிருந்தனர். (அ-144)

### சுபநேரம்

09 – 08 – 88
ஆடி — 25
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10 34 முதல் 12 04 வரை
ராகுகாலம்:
03 04 முதல் 04 34 வரை
இவை பலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Box Spring கட்டில்கள், கசற் ரேடியோ, அல்மாரி, Show case, கண்ணாடி மேசைகள், மேசை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், கிடாரம், கதவு நிலைகள் மற்றும் பல உடன்மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென். பற்றிக் ந்தியருகில்.) (5474)

## தேவை

சிறிய ஹோட்டல் ஒன்றிற்கு அனுபவம் உள்ள சப்ளையரும், குசினி கைவேலைக்கும் ஆட்கள் தேவை. சாப்பாட்டுடன் தகுதி அடிப்படையில் நியாயமான சம்பளமும் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். 315, C/o உதயன் யாழ்ப்பாணம். (5654)

### மணமகன் தேவை

யாழ் / விஸ்வகுலத்தைச் சேர்ந்த உதயத்தில் செவ்வாய் உள்ள 31வயதுநிரம்பியதனியார் துறை ஸ்தாபனத்தில் லிகிதராக வேலைசெய்யும் மகளுக்கு மணமகன் தேடுகிறார்கள். அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை உத்தியோகத்தர்கள் விரும்பத் தக்கது. வரனுக்கு ஏற்ற சீதனம் வழங்கப்படும். 316 C/o உதயன், யாழ்ப்பாணம். (5656)

### REPAIR சேவை

உத்தரவாதத்துடன் குளிர்சாதனப் பெட்டிகள், மோட்டார்கள், மின்விசிறிகள், கிறைண்டர்கள், ரான்ஸ்போமர்கள், மற்றும்மின்உபகரணங்கள் உடனுக்குடன் திருத்த, றிவைண்டிங் செய்ய நம்பிக்கையுடன் நாடுங்கள்– OMEGA-ELECTRICAL ENGINEERS, MANIPAY ROAD, JAFFNA. (5546)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகலவிதமான ரேடியோ. வீடியோ டெக், T.V., மின்விசிறிகள், மின் அடுப்புக்கள், மின் மோட்டர்கள், ஃறஸ்குக்கர், சுமீற் மொலினெக்ஸ் கிரைண்டர்கள், எலக்ரோனிக் கல்குலேட்டர். சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடுங்கள்: விக்ரர் அன் சன்ஸ் (விக்ரேஸ்) 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/ 6051)

### புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை

ஆண்டு 5ற்கான புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சை (இரண்டாவது) 10-8-88 புதன் பிற்பகல் 3 மணிக்கு (தமிழ்/கணிதம்) நடைபெறவுள்ளது. 12-8-88 வெள்ளி பி.ப. 1.30க்கு விஞத்தாள் விளக்கம் பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரி முன், யாழ்ப்பாணம். (5657)

## கல்வி

### வகுப்புகள்

O/L Day Classes வடமாகாணத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் நடாத்தப்படுகின்றது விஞ்ஞானம்- R. செல்வவடிவேல், கணிதம்-T தயாபரன், சமூகக் கல்வி, வர்த்தகம்-K.S முத்துலிங்கம், ஆங்கிலம் -தெய்வர், தமிழ்- பொன். செல்வராசா, Royal Institute, Manipay. (5503)

### பயிற்சிகள்

Radio - T. V, Air-Condition – Refrigeration, வயறிங், வெல்டிங் வைண்டிங், மோட்டர் மெக்கானிசம். பிளம்பிங், Typing, Spoken English மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. அனுபவமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, Aid Hall, 328, நாவலர் ரோட், (ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமை) Jaffna. (5496)

### தவறிவிட்டது

மட்டக்களப்பு பஸ் சாரதியாகிய நான் கோண்டாவில் டிப்போவில் பஸ்ஸை விட்டு விட்டு யாழ்ப்பாணம் வரும் வழியில் பிரயாணிகளின் சலக்ஷன்காசு 1500/- தொலைத்து விட்டேன். கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் ஒப்படைக்கவும். (5498)

### ட்றவலிங் பாக் தவறிவிட்டது

சில்லாலைக்கும் மூளாய்க்கும் இடையில் சிவப்பு நிறத்தில் வெள்ளைப் பூப் போட்ட ட்றவலிங்பாக் சில பொருட்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சில்லாலைகோவில் பங்குத்தந்தை அவர்களிடம் ஒப்படைக்கவும் நன்றி. (5655)

## கோமாரி நோய் தடுப்பு மருந்து இல்லை

வரணிப் பகுதிகளில் கால்நடைகளுக்கு பரவி வரும் கோமாரிநோயைக் கட்டுப்படுத்த வடமராட்சி கால்நடை வைத்தியசாலையில் போதிய மருந்து இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-70)

## பாலர் கல்விச் சேவை மிகவும் அவசியமாகும்

சாவகச்சேரி, ஆக 9

சமூகசேவை நிறுவனங்களில் காலகட்டத்திற்கு ஏற்ற சேவைகளை ஆற்றுவதில் அறவழிப் போராட்டக் குழு முன் நிற்கிறது. பாலர் கல்விச் சேவை மிகவும் அவசியமாகும். நாற்பது பாலர் பாடசாலைகளை செயல்பட வைத்திருப்பது அனைவராலும் பாராட்டப்பட வேண்டியது.

அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தலைவர் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி அறவழிப் போராட்டக்குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட அறவழிப் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான விடுமுறை காலப்பயிற்சியைத் தொடக்கி வைத்து உரையாற்றுகையில்மேற்கண்டவாறு கூறினார்.

அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் திரு. வி. எஸ். துரைராசா தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திரு.சிவத்தம்பிதொடர்ந்து உரையாற்றுகையில் பாலர் பருவம் உளவியல் ரீதியில் மூன்று முதல் ஐந்து வயது வரை ஆகும்.

இவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் நிறைந்த அனுபவம் உடையவர்களாக இருக்கவேண்டும்

பயிற்சிகள் வாயிலாகவும் பயனுள்ள அனுபவங்களைப் பெறமுடியும். பாலர் கல்வியில் கல்வி நிறுவனங்களும் பொது ஸ்தாபனங்களும் பணியாற்ற முன்வர வேண்டும் என்றார். (இ-31)

## கரவெட்டியில் உணவு முத்திரை

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு உணவு முத்திரை விநியோகம் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை மேற்கொண்டு வருகிறார்.

உணவு முத்திரைகளை கிராம சேவையாளர் பகுதிதோறும் பகுதி பகுதியாக விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (இ-70)


கலர் பிலிம் சுருள்களை கொம்பியூட்டர் மூலம் பிரதி செய்ய விரும்புகிறீர்களா?

FREE 8"X10" ENLARGEMENT

பிரதி 4-00

கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்



# டேட்டாசெட் (DATASET)

## உருக்குத் தளபாடங்கள் (Steel Furniture)

- எமது நிறுவனத்தின் உள்நாட்டுத் தயாரிப்பு
- பல வருட அனுபவமும் செயல் திறனும் சேர்ந்து உருவாக்கப்பட்டவை
- மிக உயர்ந்த தரமும் அழகும் நிறைந்தவை

உங்களுக்கு- உங்கள் அலுவலகத்துக்கு-
உங்கள் வீட்டுப் பாவனைக்கு ஏற்ற அனைத்து உருக்குத் தளபாடங்கள்

- வாட்றோப்ஸ் (Wardrobes)
- மேசைகள்
- கபினேட் (Filing Cabinet)
- அலுமாரிகள்
- காசுப்பெட்டிகள் (Cash Box)

மற்றும்

- தங்கள் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் தயாரித்து வழங்கப்படும்.

எமது காட்சி அறைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்

தரமானதும் விலைமதிப்பும் உள்ள உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு நல்குவீர்.

ஒவிஸ் இகுயிப்மென்ற் லிமிட்டெட்
OFFICE EQUIPMENT LTD.

கிளை அலுவலகம்:-
45, பிரப்பம்குளம் வீதி, யாழ்ப்பாணம்.
(off K. K. S. Road.)
(மனோகரா சந்தியிலிருந்து 100 யார்) (C-6121)


## Wanted

An English Steno-Typist with at least 12 years experience for work at Nor h Lanka Medical College Departments at the Co-operative Teaching Hospital, Moolai Applications from retired personnel will also be entert ined. Preference will be given to those residing close to Moolai. Apply on or before 20-08-1988 to:

**Hony Secretary,**
Board of Governors,
North Lanka Medical College,
164, Fourth Cross Street, Jaffna.


(C6101)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
3 - 7 - 1907

உதிர்வு
20 - 7 - 1987

திதி:
9 - 8 - 1988



### அமரர் திரு. போ. நடராசா
(காட்டர்)

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே! நீர் எம்மை விட்டு இறைவனடி சேர்ந்து ஒருவருடம் ஆகிறது. உங்கள் நினைவுகள் எங்கள் இதயத்தில் அணையாத தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை உளமாரப் பிரார்த்திக்கிறோம்.

—அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

ஆடியாமடம்,
கொக்குவில். (5499)

உ
முருகா

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



### அமரர் பெ. மாணிக்கவாசகர்
(கிராம சேவை உத்தியோகஸ்தர்)

தோற்றம்: 05-09-1939
மறைவு: 13-07-1988

அன்புடையீர்!

13-07-1988ல் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பெ. மாணிக்கவாசகர் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் அவரது துன்னாலை இல்லத்தில், 10-08-88 புதன்கிழமை காலை 6 மணிக்கும், வீட்டுக் கிருத்தியம் 11-08-88 வியாழக்கிழமை காலை 10 மணிக்கும் நடைபெறும்.

இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வணக்கம்

இங்ஙனம்
மனைவி, சுகேந்திராதேவியும்
சகோதரர்களும், குடும்பத்தினரும்.
துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (5686)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்)

இங்கு வருடம் 6 தொடக்கம் வருடம் 12 வரையும் சகல பாடங்களும் Spoken English, Short-Hand and Typing, தையல், சங்கீதம், Wireing and Welding ஆகிய வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய பிரிவுகள் 10ஆந் திகதி ஆரம்பமாகின்றன. இத்துடன் பெண்களுக்கு விடுதி வசதியும் அளிக்கப்படும். (5632)

## நாளை ஆரம்பம்

**பௌதிக வகுப்பு**
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

**90 A/L**

ஆரம்பம்:- 10 - 8 - 88
காலை 6 மணி

ஆசிரியர்:-
**வர்ணம்**

(C/6128)

## எமது நேற்றைய புதிய வெளியீடு

S. V. சேகர் – விஜி
**'உன்மயக்கம்தீரவில்லை'**

ஜெய்சங்கர் - ராதிகா
**'கன்னித்தீவு'**

### இவ்வார வெளியீடுகள்:-

(1) நல்லமுடிவு
(2) லலிதா
(3) புதுவெள்ளம்
(4) ஔவையார்
(5) மிஸியம்மா
(6) பாரதவிலாஸ்
(7) ஆலயமணி
(8) தாய்மீது சத்தியம்
(9) உறவு சொல்ல ஒருவன்
(10) சபாஷ்மீனா
(11) அன்புக்கரங்கள்
(12) பழனி
(13) தாய்
(14) சிவகாமியின் செல்வன்
(15) கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி
(16) தங்கை
(17) மணாளனே மங்கையின் பாக்கியம்
(18) வேட்டைக்காரன்
(19) பத்தாம் பசலி
(20) கூண்டுக் கிளி
(21) புதிய பூமி
(22) ரங்கா
(23) தனிப்பிறவி
(24) கன்னித்தாய்
(25) இராமாயணம் I, II

அனைத்தும் ஒறிஜினல் பிரதிகள்

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

(C-6127)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. கந்தையா இராசரத்தினம்
(அளவையாளர்)

தோற்றம்: 19-2-1938
மறைவு: 8-8-1981

உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக.

பிரிவில் துயருறும் மனைவி, மக்கள், தாயார், சகோதரர், உறவினர்.

வட்டுக்கோட்டை கிழக்கு. (5633)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பூஸா கைதிகள் விவகாரம் காந்தி சேவா சங்கத்துக்கு தூதரக செயலாளர் கடிதம்

மட்டக்களப்பு, ஆக. 9

பூஸா முகாமிலும் சிறைச்சாலைகளிலும் விடுதலை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இலங்கை-இந்திய உடன்படிக்கையை ஏற்றுக் கொள்கிருர்களா? இல்லையா?

மேற்படி விவரத்தை உடனடியாக அனுப்பி வைக்குமாறு இந்திய தூதரக அரசியல் செயலாளர் திரு. எஸ். ஜெய்சங்கர் மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தை கேட்டுள்ளார்.

மேற்படி கைதிகள் விடுதலை தொடர்பாக மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இவ்விவரங்கள் கோரப்படுவதாக திரு. ஜெய்சங்கர் அனுப்பி

(4ம் பக்கம் பார்க்க)


**SHABRA**

வட பிராந்திய மக்களின் நலன்கருதி பின்வரும் சேவையை

**மீண்டும் ஆரம்பித்துள்ளது**

- ஆங்கில ஸ்ரென்ஸில் கட்டிங் English Stencil Cutting
- தமிழ் ஸ்ரென்ஸில் கட்டிங் Tamil Stencil Cutting
- ரோணியோ பிரதி செய்தல் Roneo Duplicating
- ஆங்கில, தமிழ் ரைப்பிங் English, Tamil Typing
- கடிதம் எதுவாயினும் தயார் செய்து கொடுக்கப்படும். English, Tamil-Correspondence

பல வருட அனுபவம் உள்ள ஊழியர்கள் மேல் குறிப்பிட்ட சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். குறுகிய நேரத்தில் குறைந்த கட்டணத்தில் திறமையான சேவையை உங்களுக்கு கொடுப்பார்கள்.

நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:


'ஷப்ரு'
207, மின்சார-நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

'SHABRA'
207, Power-House Road,
JAFFNA.

C-6083



**புரோட்டீன் நிறைந்த புரோட்டினெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!**




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறும்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


# பாலர் ஆசிரியர் பயிற்சி நெறியில்

## சித்தியடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஆக 9

1987 ஆம் ஆண்டு பாலராசிரியர் சங்கம் நடத்திய பாலராசிரியர் பயிற்சி நெறியில் பங்கு பற்றிக் கடைசிப் பரீட்சையில் சித்தியடைந்தோர் வருமாறு:

செல்விகள் இ. வனித்தா கோண்டாவில், செ. சிலோன்ராணி கோண்டாவில், சி. இந்திராதேவி (வடலியடைப்பு. சு. கோமதி மாதகல், பொ. இராஜேஸ்வரி அரியாலை, சு. சிவபாக்கியலட்சுமி கோண்டாவில் பொ. தேவிகாராணி வல்வெட்டித் துறை.

செல்விகள் சி. ஜெயதேவி கோண்டாவில், கு. சுமதி கோண்டாவில், சி. கௌரி அல்வாய், திருமதி. சி, பத்மினிதேவி அல்வாய், செல்விகள்; சு. நளாயினி ஆனைக்கோட்டை, பா. நிரஞ்சனி உடுவில், திருமதி. ஞா. மல்லிகாதேவி பண்டத்தரிப்பு.

செல்விகள் க. விக்னேஸ்வரி சங்கானை, சி. பாலராஜேஸ்வரி அரியாலை. ந. புஸ்பமலர் கொக்குவில், கா. ரேவதி கொழும்புத் துறை.

செல்விகள் கோ. வளர்மதி யாழ்ப்பாணம், செல்வி- ஞா- மங்களேஸ்வரி சாவகச்சேரி, ஆ. கிறிஸ்டபெல் இமல்டா நாஞட்டான் ஜெ. ஜெயமதி அரியாலை, சு. ரோசமலர் பண்டத்தரிப்பு, அ. மாகிறட் கல்யாணி யாழ்ப்பாணம். க. தர்ஷினி யாழ்ப்பாணம், து. ஜெயந்தினி கரவெட்டி.

செல்விகள்; இ. உமாதேவி கரவெட்டி, ந. விஜயராணி கொழும்புத்துறை, க. விஜயமாலா பாண்டியன் தாழ்வு, கி. தேவநாயகி அச்சுவேலி, சி. சிவநேச ஜோதி சுன்னுகம், மு. புஸ்பலேகா கல்வியங்காடு.

செல்விகள்; வே. கமலராணி அச்சுவேலி, இ. சசிகலா கல்வியங்காடு, கா. வேல்மலர் வட்டுக்கோட்டை, சி. கீதாஞ்சலி வல்வெட்டித்துறை, ம. கமலலோஜினி பருத்தித்துறை, இ. நிர்மலாதேவி காரைநகர்.

செல்வி சு. சூரியகுமாரி காரைநகர் திருமதி இ. பத்மராணி புங்குடுதீவு, செல்விகள் சு. வள்ளிநாயகி காரைநகர், கை. யசோதராவேலனை, செ. ஹமீதியா யாழ்ப்பாணம், மு. கீதாஞ்சலி உரும்பிராய்.

செல்விகள் இ. ஞானசக்தி பருத்தித்துறை, மு. உமாதேவி சுதுமலை, ந. கலைவாணி வேலணை, திருமதி. ந. அழகேஸ்வரி சுதுமலை, செல்வி. ஜெ. யூவனிற்ரு மேரிபெல் யாழ்ப்பாணம்.

செல்விகள் த. பேபி சத்தியபாமா நல்லூர், ச. கத்தரின் டெய்சி இளவாலை, எ. லில்லி ஜெயந்திஇளவாலை, பா. இந்திராணி யாழ்ப்பாணம், யோ. பிறனிற்ரா கோப்பாய், சு. சந்திரமாலா இளவாலை.

செல்விகள் ப. தயானி உரும்பராய், லீ. எமரண்சியாஞ யசோதா யாழ்ப்பாணம், இ. ஜெனற் நாரந்தனை, யா. கலிஸ்ரா நாரந்தனை.

(ஓ)

## பஸ்சேவை ஆரம்பமாகாதது குறித்து கவலை

வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு புதிய பஸ்கள் வந்து சேர்ந்ததும் கோப்பாய் ஊடாக நடத்தப்படும் சாவகச்சேரி — மானிப்பாய் பஸ் சேவை இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருப்பது மிகவும் கவலை தருகிறது.

இவ்வாறு கோப்பாய் பிரயாணிகள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை தனியார் பஸ்களில் எடுத்துச் செல்லும் போது கட்டணங்கள் அதிகமாக இருப்பதாகவும் அவர் கூறினுர்.

(இ-72)

## வவுனியாவில் ரயில்கள் தாமதம்

வவுனியா ஆக 9

ஞாயிறு அதிகாலை 5. 27 க்கு வவுனியா வந்தடைந்த கொழும்பு-யாழ் இரவுத் தபால் ரயில் காலை 8. 30 மணிவரையிலும் வவுனியாவிலேயே தரித்து நின்றது.

இந்திய அமைதிப்படையினர் தாங்கள் அறிவிக்கும் வரை வவுனியாவிலிருந்து ரயில் புறப்படக் கூடாதென்று அறிவித்ததனுலேயே இந்த தாமதம் என்று ரயில்வே வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இரவு 11 30 மணிக்கு கொழும்பில் புறப்பட்ட ரயில்கள் இங்கு 3 மணித்தியாலத்திற்கு மேலாக வீணுக காத்துகிடப்பது ஏன் என்று பயணிகள் அங்கலாய்த்தனர்.

சனிக்கிழமையிலும் பார்க்க பயணிகளின் எண்ணிக்கை ஞாயிறன்று குறைவாகவே இருந்தது.

சனியன்றும் காலை 5.30 க்கு வவுனியா வந்த ரயில் 8 மணிக்குப் பின்னரே இரண்டரை மணித்தியாலங்களுக்கு மேலாக தாமதமாகியே புறப்பட அனுமதிக்கப் பட்டது. (அ-164)

## மாங்குளத்தில் தையல் பயிற்சி வகுப்பு

மாங்குளம், ஆக 9

மாங்குளத்தில் தொழில் திணைக்களத்தினுல் திரு. சிங்காரவேலு கட்டிடத்தில் தையல் பயிற்சி வகுப்பு இம்மாதம் முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இதில் படித்த 20 யுவதிகள் 9 மாதப் பயிற்சியை ஆரம்பித்துள்ளனர்.

யுவதிகளுக்கு பயிற்சிக் காலத்தின் போது நாளொன்றுக்கு ஐந்து ரூபா வீதம் வாழ்க்கைப் படியை தொழில் திணைக்களம் வழங்குகிறது. பயிற்சியை முடித்த பின் இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தையல் பயிற்சி வகுப்பை திரு. மகாலிங்கம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். (இ-94)

# காரைநகரில் குடிதண்ணீர் பிரச்சினை மோசமடைகிறது

## போதிய மழைவீழ்ச்சி இன்மையே காரணம்

காரைநகர், ஆக. 9

போதிய மழையின்மை காரணமாக காரைநகரில் இந்த ஆண்டு குடிதண்ணீர்ப் பிரச்சினை மோசம் அடைந்துள்ளது.

குடிதண்ணீர் பைப்புகளுக்கு அருகில் குடங்கள் நீண்ட வரிசையில் காணப்படுகின்றன.

குடிதண்ணீர் ஒரு குறிப்பிட்ட நேரமே காலையும், மாலையும் பைப்பில் வருவதால், முன்னதாகவே வந்து இடம் பிடிப்பவர்கள் தமக்குப் பதிலாக குடங்களை வரிசைக்கிரமமாக விட்டுச் செல்கின்றனர்.

நன்நீர் கிணற்றடிகளிலும் மக்கள் பெரும் அளவில் காணப்படுகின்றனர்.

மக்கள் கியூவில் நின்று நல்ல தண்ணீர் அள்ளுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சில கிணறுகளில் மண்டித் தண்ணீரும் அள்ளப்படுகிறது.

இதனுல் சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் ஆபத்து உருவாகலாம் என்று அஞ்சப்படுகிறது.

(இ - 73)

## வவுனியா, மன்னூர், முல்லைத்தீவு கிளிநொச்சிப் பகுதிகளில் பரீட்சை அமைதியாக நடக்கிறது

வவுனியா ஆக 9

வவுனியா, மன்னூர், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் ஜீ சி. ஈ. உயர்தரப் பரீட்சை எதுவித தடங்கல்களுமின்றி நடைபெறுகின்றது.

சகல தரப்பினரும் இதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கி வருகின்றனர் என்று வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இம்மாவட்டங்களுக்கான வினுத்தாள்கள் கொழும்பிலிருந்து விமானம் மூலமாக வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்துஆகாய மார்க்கமாக மன்னூர், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இதேபோல விடைத்தாள்களும் வவுனியாவுக்கு முதலில் கொண்டு வரப்பட்டு பின்னர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. என்று திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சை வேலைப்பளுவைத் தொடர்ந்து திரு. இ. சுந்தரலிங்கம் வவுனியா மாவட்டக் கல்விப் பணிப்பாளராகவும் சடந்த மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டதுடன் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னூர் மாவட்டங்களின் பரீட்சை இணைப்பதிகாரியாகவும் கடமையாற்றுகின்ருர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-164)


# பிரயாண ஒழுங்குகள்

## VACANCIES IN SAUDI ARABIA

**CATEGORY**

| | | |
|---|---|---|
| 1. | Work Controller | SR 1100+100 FA |
| 2. | Work Scheduler | SR 1100+100 FA |
| 3. | MATERIAL Controller | SR 800+100 FA |
| 4. | Hvac-Split Units/Central Technicians | SR 900+100 FA |
| 5. | Appliance Technician | SR 800+100 FA |
| 6. | T.V. Repairman | SR 700+100 FA |
| 7. | Carpenter/ Locksmith | SR 600+100 FA |
| 8. | Plumber | SR 600+100 EA |
| 9. | Painter | SR 500+100 FA |
| 10. | Janitor/General Workers | SR 300 &100 FA |
| 11. | H.D.Duty Driver/ Janitor Supervisor | SR 600& 100 FA |
| 12. | Mechanical Helper | SR 400& 100 FA |

## DUBAI

1. Farm Labourers 450& 100 Dubai Riyal
2. ஆணிகள் செய்யும் தொழிற்சாலை லேபர் 450& 100 Dubai Riyal
வயதெல்லை 18க்கு மேல்

## KUWAIT

1. Cleaners [National Cleaning Company] 30 KD

சிங்கப்பூர் House Maid
உடன் தேவை

சம்பளம்: 250 SD
வயதெல்லை: 20 — 30 வரை

**Passport, கலர்ப் படம் Passport Size படம் 6 தேவை.**

**முற்பணம் அறவிடப்பட மாட்டாது.**

பிரயாணம் செய்ய கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டு திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.

காரியாலயங்கள் அனைத்தும் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி மட்டும் திறக்கப்படும்.

தலைமைக் காரியாலயம்:-

**கோல்டன் ரவல்ஸ் & ருர்ஸ்**
புகையிரத நிலைய வீதி,
சுன்னுகம்.

கிளை: 1.
**கோல்டன் ரவல்ஸ் & ருர்ஸ்**
குப்பிளான் சந்தி, குப்பிளான்.

கிளை: 2.
**கோல்டன் ரவல்ஸ் & ருர்ஸ்**
வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி.

(C 6106)


யுத்த நிறுத்தம் செய்வதன் மூலம்

# மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும்

## டிக்ஸிற்றுக்கு கூட்டாகக் கடிதம்

வவுனியா, ஆக 9

பெறுமதி மிக்க மனித உயிர்கள் அனுவசியமாகப் பறிக்கப்படுவதை உடன் நிறுத்தி, எமது மக்களின் நியாயமான எதிர்ப்புக்கள் தீர்க்கப்படுவதற்காக இந்திய அரசு விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் செய்து பிரச்சினைக்கு உரிய விடயங்களைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிருேம்.

வவுனியா மாவட்ட கிராமோதய சபைத் தலைவர்கள் இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற்றுக்கு கூட்டாக கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இன்றைய காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் நிம்மதியான வாழ்க்கைக்காகவும். அமைதிக்காகவும் அங்கலாய்த்து நிற்கின்றனர்.

இந்த நிலையில் மக்களின் அங்கீகாரம் பெற்ற கிராமோதய சபைகளின் தலைவர்களாகிய நாங்கள் மக்களின் நலனையும் அமைதியையும் விடியையும் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

சடந்தபல வருடங்களாக இலங்கை இராணுவத்தின் வெறியாட்டத்தாலும் கடந்தஓராண் காலமாகஇந்தியஇராணுவத்தின் நடவடிக்கைகளாலும் தமிழ்பேசும் மக்கள் அனுபவித்த கஷ்டங்கள், மனிதப்படுகொலைகள் மானபங்கங்கள் சித்திரவதைகள் சொத்திழப்புக்கள் கணக்கில் அடங்காதவை.

இன்னும் அந்த நிலை நீடிக்கின்றதே தவிர மக்களின் எதிர்பார்ப்புகள் ஏக்கங்கள் தீர்வதாக இல்லை.

இந்தநிலையில் நாம் நியாயபூர்வமாகச் சிந்திக்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

தமிழ் பகுதிகளில் கிரமோதய சபைகளினூடாகச் செய்யப்படுகின்ற அபிவிருத்தி வேலைகள் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காகவோ முன்னேற்றத்திற்காகவோ செய்யப்படுவதாக நாம் கருதவில்லை.

மாருக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ [illegible] திருப்ப எடுக்கப்படு கின்ற அற்ப உதவியாகவே நாம் கருதுகின்ருேம்.

இன்று மக்கள் வேண்டுவதெல்லாம் அபிவிருத்திக்கு முன்-அமைதியே.

இலங்கை இராணுவத்தின் அடாவடித்தனங்களும் அழிவுகளும் இந்திய இராணுவத்தின் வருகையால் நிறுத்தப்பட்டு, நிம்மதியும் அமைதியும் ஏற்படும் என்ற நிலை தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இருந்து அகன்று விட்டது.

இந்த நிலையில் வவுனியா மக்கள் தங்களின் உடனடித் தேவைகளையும் உணர்வுகளையும் உள்ளக் குமுறல்களையும் கடந்த 18-6-88 அன்று வவுனியா மாவட்டப் பிரஜைகள் குழுக்கள் கிராமோதய சபைகள் மற்றும் பொதுஸ்தாபனங்கள்மூலமாக ஒன்றுசேர்ந்து நடத்திய அமைதி ஊர்வலத்தின்போது ஒரு மகஜர் மூலம் இந்திய இராணுவத்தினரிடம் தெரிவித்தனர்.

ஆனுல் இக்கோரிக்கைகளுக்கு இதுவரையில் எதுவித நடவடிக்கைகளோ அல்லது முன்னேற்றமோ இல்லை.

மாருக அதற்குப் பின் [illegible] நடவடிக்கைகளை இன்னும் தீவிரப்படுத்தி செட்டிக்குளம் பாவற்குளம், நெடுங்கேணி, ஒலுமடு பகுதிகளில் பல அப்பாவி மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. பலர் கைதாகி சித்திரவதை செய்யப்பட்டுள்ளார் சிலருக்கு என்ன நடந்தது என்றே தெரியாமல் உள்ளது.

ஆகவே பெறுமதிமிக்க மக்களின் உயிர்கள் அனுவசியமாகப் பறிக்கப்படுவதை உடன் நிறுத்தி எமது மக்களின் நியாயமான எதிர்ப்புக்கள் தீர்க்கப்படுவதாக இந்திய அரசு விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் செய்து பிரசசினைக்குரிய விடயங்களைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிருேம்.

இந்தநிலையில் வவுனியா மாவட்டத்தில் இயங்கிவருகின்ற தமிழ் பேசும் பகுதிகளான சகல கிராமோதய சபைகளின் தலைவர்களாகிய நாங்கள் கூட்டாக எங்கள் தலைவர் பதவிகளிலிருந்து இராஜினமா செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம் என்பதைத் தங்களின் ஆழ்ந்தகவனத்திற்குச்சமர்ப்பிக்கிருேம்.

இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு உதவியுடன் தொழிற்பயிற்சி அளிக்க

## ஒன்றியத்திடம் கோரிக்கை

காங்கேசன்துறை ஆக 9

பாடசாலை மாணவர்கள் கல்வி பயின்று முடிந்து வெளியேறியதும் தொழில் வாய்ப்பு பெறும் வகையில் அவர்களுக்கு தொழில் பயிற்சி வெளிநாட்டு உதவியுடன் நடைமுறைப் படுத்த ஒன்றியம் முன் வரவேண்டும்.

இப்படியான கோரிக்கை ஒன்றை காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி அதிபர் திரு. சிவராஜரத்தினம் விடுத்தார்.

வலி-வடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றியத்தின் கூட்டத்திலேயே அவர் இக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இன்று எட்டுப்பாடசாலைகளில் தொழில் பயிற்சி வகுப்புக்கள் நடக்கின்றன. ஆனால் அவை பணம் இன்றியும், வேறு வசதிகள் இன்றியும் உள்ளன. இதனால் நல்லபயிற்சியை மாணவர்கள் பெறுவதில் கஷ்டமடைகின்றனர்

ஆகவே இந்த ஒன்றியம் வெளிநாட்டு உதவியுடன் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை அமைத்தால் நல்லது.

இப்படி அவர் கூறினார்.

(இ-68)

# கண்டெடுக்கப்பட்ட அடையாளக் கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், ஆக 9

கண்டெடுக்கப்பட்ட அடையாளக் கார்ட்டுகள், சாரதி லைசென்ஸ் புத்தகம் என்பன பொது மக்களால் 292/2 நாவலர் வீதியில் உள்ள உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ள முடியும்.

1. 403771977V எலிசபெத்தம்மா செல்வராஜா அச்சுவேலி,
2. 462843380X கனகசபை தியாகராசாஇராமநாதபுரம்.
3. 547890167X ஆரியமுத்து புஸ்பலீலா மாத்தனை.
4. 627993234V பாலசுப்பிரமணியம் அன்புமலர் வட்டுக்கோட்டை.
5. 682571551V அமிர்தநாதன் அல்போன்ஸ் அமிர்தராஜா திருகோணமலை.
6. 571923190V கந்தையா யோகபரமேஸ்வரன் நெடுங்கேணி
7. 652761968V பரமலிங்கம் ஜெயக்குமார் கொக்குவில்.
8. 591981099V மாணிக்கம் சண்முகநாதன் பொலிகண்டி.
9. 536212132X புவனேஸ்வரி கந்தையா யாழ்ப்பாணம்.
10. 310140090V செல்லையா பாலச்சந்திரன் அரியாலை மேற்கு.
11. 691731227V பிலிப் ஜோர்ஜ் தேவகுமார் கைதடி.
12. 271621620V ஐயாத்துரை வடிவேலு சோனகதெரு.
13. 342401201V அருளானந்தன்செபஸ்தியன் தெகிவலை.
14. 651102294V அல்பிரட் நீக்கலஸ் கொட்டடி.
15. 525493563X புஸ்பசோதி கந்தையா உருத்ரபுரம்.
16. 518580183V இந்திரா பொன்னுத்துரை கோப்பாய்வடக்கு
17. எஸ். கமலநாயகி, கோண்டாவில்.
18. சதாசிவம்விஜயரட்ணம், யாழ்ப்பாணம்.
19. புஸ்பம்செல்வராஜா நாவாந்துறை,
20. ஜெயசுப்பிரமணியம் (சாரதி அனுமதிப் பத்திரம்) வல்வெட்டித்துறை.
21. 550370409X நா. சுந்தரலிங்கம் (விவசாயத் திணைக்கள அடையாளக்கார்ட்)


## 61 வது நாள் நினைவஞ்சலி



தாயின் மடியிலே
சேயாய்
மலர்ந்த நாள்
27-7-1965

நாயக மண்ணிலே
உதிர்ந்த நாள்
09-06-1988

வாமதேவா

பழகிவந்த உனது முசம்
பாதியிலே எமைவிட்டுப் பிரிந்தாலும்
எழுதி வைத்த ஓவியம் போல்
வாமதேவனே வாழுகின்றாய்
எம் நெஞ்சம் தனிலே!
சோதரர்கள் நாங்கள் இங்கே
துடுப்பிழந்த படகுபோல் உன்துயரத்தால்
வாடுகின்றோம் வாமதேவா
கல்மனம் கொண்டு இறைவனும்
உன்னைப் பறித்துவிட்டானே தேவா
வெந்தணலில் பட்ட மெழுகுபோல்
துடிக்கின்றோம் உன்பிரிவுத்துயர்
தாங்காது
எமையெல்லாம் ஏங்கவைத்து விட்டு
பிரிந்த நாளோ
எண்ணில் அறுபத்தி ஒன்றானதே இன்று!
உன் ஆத்மா சாந்திபெற — எங்கள்
கண்ணீர்த் துளி ஐ
காணிக்கையாய் செலுத்துகின்றோம்

உன் பிரிவால் வாடும்
தாய் தங்கையர் உட்பட
உடன்பிறவா சோதரர்கள்
[மோகன், குமார்]

[5625]


வவுனியா ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் இல்லை:

# ஆபத்தான நோயாளிகளை ஜீப்பில் அனுப்பும் அவலம்!

வவுனியா, ஆக 9

வவுனியா ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் இல்லாததனால் நோயாளிகளை அனுராதபுரத்துக்கு அனுப்புவதில் பெரும் சிரமங்களை வைத்திய அதிகாரிகள் எதிர்நோக்கியுள்ளார்கள்.

சில வாரங்களுக்கு முன், இங்கு பாவனையில் இருந்த அம்புலன்ஸ் விபத்துக்கு உள்ளாகி சேதமடைந்ததைத் தொடர்ந்து ஜீப் ஒன்றிலேயே அனுராதபுரத்துக்கு ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகள் அனுப்பி வைக்கப்படுகின்றார்கள்.

இரண்டு வருடங்களின் முன்பு ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வவுனியா ஆஸ்பத்திரிக்கு இரண்டு அம்புலன்ஸ்கள் வழங்கப்பட்டன.

ஆயினும் அப்போதைய நிலைமைகள் காரணமாக அனுராதபுரம் ஆஸ்பத்திரியின் பாவனையில் அவை இருந்து வருகின்றன.

இப்போதைய சூழ்நிலையிலும் அவற்றை வவுனியாவுக்கு அனுப்பி வைக்க மறுப்பு தெரிவிக்கப்படுகின்றது.

(இ164)

1983இற்குப் பின்

# காணாமல் போனோர், தடுப்புக் காவலில் உள்ளோர் பற்றிய விவரங்கள் சேகரிப்பு

செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரதேசக் கிளையினர் 1983ஆம் ஆண்டின் பின் காணமற்போனவர்கள், இராணுவ முகாம்களில் தடுப்புக் காவலில் உள்ளவர்கள் பற்றிய விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.

இத்தகவலைச் செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

1983ஆம் ஆண்டின் பின் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளினால் பலர் காணமற் போய்விட்டார்கள்.

இன்னும் பலர் இராணுவத் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் பற்றிய முழுமையான தகவல்கள் எவருக்கும் தெரியாது.

காணமற்போனவர் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் பற்றிய பூரண விவரங்களைத் தெரிந்து கொண்டால் தான் இவர்களைப்பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது இலகுவானதாக இருக்கும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி மேலும் தெரிவித்தார். (க-5)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

சாவகச்சேரி, ஆக. 9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வி. பி. தியாகராசா உபதலைவர்கள் திரு. கா. நவரத்தினம் திரு. அ. அருண்குமார் திரு. எஸ் நடராசா, காரியதரிசி:- திரு. எஸ். அரியதேவா தனாதிகாரி:- திரு. எஸ். அருளானந்தம்.

(இ- 31)

## செருக்கஞ்சாட்டி முத்துமாரிஅம்மன் திருப்பணிச்சபை

கோப்பாய், ஆக. 9

பனை செருக்கஞ்சாட்டி முத்துமாரி அம்மன் கோவில் நடப்பு வருட திருப்பணி சபை அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:- கைலாயபிள்ளை காரியதரிசி:- செ. பொன்னம்பலம் தனாதிகாரி:- தம்பிராசா

12 பேரைக் கொண்ட நிருவாக சபையும் தெரிவாகி உள்ளது.

போஷகராக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(இ- 72)

இந்திரா காங்கிரஸைப் போல

# குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் போக்கு தி. மு. கவுக்கு இல்லை

## கருணாநிதி பேட்டி

காங்கிரஸ் கட்சியுடன் தி. மு. க. கூட்டுசேரும் சாத்தியம் உண்டா? ஸ்டாலினை தி. மு. க. தலைமைப் பதவியில் பதவியில் அமர்த்த முயற்சி நடக்கிறதா? போன்ற கேள்விகளுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி பதிலளித்துள்ளார். அவரது சிறப்புப் போட்டி வருமாறு:

எம். ஜி ஆர். இறந்த பின் அ. தி. மு. க. இரண்டாக உடைந்தது. இப்போது ஜெயலலிதா அணியும் இரண்டாகும் போல் தெரிகிறது. உங்களுச்கு மகிழ்ச்சிதானே?

கருணாநிதி: எனக்கு ஏன் மகிழ்ச்சி ஏற்பட வேண்டும். இதெல்லாம் இன்னொரு கட்சியின் விவகாரம். அதைப் பற்றிச் சிந்தித்து நேரத்தை வீணடிப்பதைவிட உருப்படியான வேலை எனக்கு இருக்கிறது. ஒன்று மட்டும் சொல்கிறேன்.

கடந்த பத்தாண்டுகளாக நாங்கள் சொல்லி வந்த ஊழல் குற்றச்சாட்டுகள் எல்லாமே உண்மை என்பது இப்போது அவர்கள் ஒருவருக்கொருவர் கூறிக் கொள்ளும் குற்றச் சாட்டுகள் மூலம் நிருபணமாகின்றன. ஆரம்பித்த நாளில் இருந்தே அக்கட்சி எம்.ஜி.ஆர் என்ற தனிநபரின் ஷோ ஆகத் தான் இருந்தது. எனவே எம். ஜி. ஆர். இல்லை என்றநிலை ஏற்படும் போது அக்கட்சிக்கும் இயற்கையான மரணம் ஏற்படுவது தவிர்க்க முடியாது. கட்சி இரண்டாக உடைந்தது எதிர் பாராததுமல்ல, வியப்பானதும்அல்ல.

### லாபமா?

கே: அ.தி மு.க. பிளவால் தி மு. கவுக்கு லாபம் இல்லை என்கிறீர்களா?

கரு: பிளவு ஏற்பட்டதால் அவர்கள் பலவீனமாகி ஒன்று மில்லாத நிலைக்கு வந்துவிட்டார்கள். தி. மு. க. அப்படி அல்ல. கொள்கைகள் அடிப்படையில் உருவாகி வளர்ந்த கட்டுக்கோப்பான தொண்டர்கள் உள்ள கட்சி. தமிழகத்தில் நிலையான ஆட்சி அமைக்க தி.மு.க.வால் மட்டுமே முடியும் என மக்கள் இப்போது புரிந்து கொண்டார்கள். அந்த வகையில் பார்த்தால் எங்களுக்கு பலம் கூடியிருக்கிறது என்று கூறலாம். ஆனால் காங்கிரஸைப்போல, குழப்பிய குட்டையில் மீன் பிடிக்கும் போக்கு எங்களுக்கு இல்லை.

கே: ஜெயலலிதாபற்றி உங்களிடம் யார் என்ன கேட்டாலும் பதில் சொல்லமாட்டீர்களாமே, ஏன் அப்படி?

கரு; நோ காமென்ட்ஸ். (எதுவும் சொல்வதற்கில்லை]

### காத்திருங்கள்

கே: ஜெயலலிதா இன்று ஒரு பெரிய அரசியல் சக்தியாக தமிழகத்தில் உருவெடுத்து விட்டார். அப்படி ஒருஆளே இல்லை என்பதுபோல நீங்கள் நடந்து கொள்வதால், ஜெயலலிதாவின் வளர்ச்சியைத் தடுத்துவிட முடியும் என்று நினைக்கிறீர்கள்?

கரு: தேர்தல் நடக்கும்வரை காத்திருங்களேன். இந்தக் கேள்விக்கு நான் வேண்டாம். தமிழக மக்களே பதில் சொல்லிவிடுவார்கள்.

கே: அப்படியானால் தேர்தலில் உங்கள் முதல் எதிரியாக யாரை நினைக்கிறீர்கள்?

கரு: காங்கிரஸ்தான். அன்றும் இன்றும் என்றும் காங்கிரஸ் தான் எங்கள் முதல் எதிரி.

கே: இவ்வளவு கடுமையாககாங்கிரஸை விமர்சனம் செய்யும் நீங்கள் இதற்கு முன்பு பல தேர்தல்களில் அதனுடன்கூட்டுச்சேர என்ன காரணம்?

கரு. தி. மு. க. ஒரு பிராந்தியக் கட்சிதானே என்று பலர் நினைக்கலாம். உண்மையில் நாங்கள் தேசியப் பார்வை கொண்டவர்கள். நாட்டுக்கோ, நாட்டின் ஜனநாயகத்துக்கோ அபாயம் ஏற்படும்போது இது தெளிவாகி இருக்கிறது. 69இல் முன்னாள் மானிய ஒழிப்பு, வங்கிகள் நாட்டுடைமை போன்ற முற்போக்குச் சட்டங்களை இந்திரா காந்தி கொண்டுவந்த போது, பிற்போக்கு வலதுசாரிகள் அவற்றை எதிர்த்தனர். எனவே நாங்கள் அவருக்குக் கை கொடுத்தோம். அதே இந்திரா காந்தி நெருக்கடி நிலையை பிரகடனம் செய்த போது கடுமையாக எதிர்த்த முதல் கட்சி தி. மு. க. தான். ஜனதா ஆட்சியில் குழப்பம் ஏற்பட்டு நாட்டில் ஸ்திரமின்மை உருவானதால் 80 இல் மீண்டும் இந்திரவை ஆதரித்தோம். அப்போது இந்திராவுக்கு சரியான மாற்றாக யாராவது இருந்திருந்தால் தி.மு.க. வுக்கு அந்த அவசியம் ஏற்பட்டு இருக்காது.

### ராஜீவின் பேச்சு

கே: திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் தான் தமிழகம் இருண்ட காலத்தை சந்தித்தது என்று இங்கு வந்த ராஜீவ்காந்தி பேசியிருக்கிறார். உங்கள் பதில் என்ன?

கரு: கழுத்துவரை ஊழல் புகார்களில் சிக்கியிருக்கும் நமது பிரதமர் இப்படிச் சொல்வது தான் வேடிக்கை. திராவிட ஆட்சி பற்றி அவரது கட்சியினர் கூறும் குற்றச்சாட்டுகள் பெரும்பாலும்கற்பனையில் உதிர்தவைதாம். எம்.ஜி.ஆர் அமைச்சரவை மீது இன்று ஊழல் புகார் கூறும் காங்கிரஸ், அவருக்கு பாரதரத்ன விருது கொடுத்தது இந்தப் பெருமைகளுக்காகத் தானா? சோசலிசத்துக்கும் மக்கள் நலனுக்கும் எதிரான கட்சி என்று 40 வருட ஆட்சி மூலம் நிருபித்துவிட்ட காங்கிரசுக்கு மற்றக் கட்சிகளைக் குறை சொல்ல எந்த அருகதையும் கிடையாது.

கே: நீங்கள் அடிக்கடி ஜானகி அணித் தலைவர்களுடன் ஒரே மேடையில் தோன்றுவதால் மக்களுக்கு அப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டுள்ளதே?

கரு: ராஜீவுடன் ஒரு மேடையில் தோன்றினால் காங்கிரசுடன் கூட்டு என்று அர்த்தமா? தி. மு. க. அணியில் முஸ்லீம், லீக், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், கம்யூனிட்ஸ் ஆகிய கட்சிகள் மட்டுமே உண்டு. புது நட்பு வேண்டாம். பழைய நட்பையும் விடமாட்டோம்.

### மகன் தலைவர்?

கே: உங்களுக்கு அடுத்து தி. மு. க. தலைவராக வருவதற்கு மகன் ஸ்டாலினை தயார் செய்வதாக சொல்லப்படும் குற்றச்சாட்டில் எந்த அளவு உண்மை இருக்கிறது?

கரு: தி. மு. க. ஒரு ஜனநாயகக்கட்சி. இங்கே பொதுக்குழு வாக்களித்து ஒப்புதல் தராவிட்டால் நானே தலைவராக நீடிக்க முடியாது. கட்சித் தொண்டர்கள் ஏற்காமல் நான் விரும்பினால் கூட என் மகனைத் திணிக்க முடியாது. என்மகன் அரசியலுக்கு வருவது ஆரம்பத்தில் இருந்தே எனக்குப் பிடிக்கவில்லை. தடுத்துப் பார்த்தேன். அதே சமயம், அவன் தனக்கு என்ன தொழில் வேண்டும் என்பதைத் தேர்ந்து எடுத்துக் கொள்வதற்கான உரிமையில் தலையிடவும் நான் விரும்பவில்லை. அவனை அரசியலில் திணிக்கவும் இல்லை; தடுக்கவும் இல்லை. தன் திறமையை நிரூபிப்பது அவனுடைய வேலை.

கே: என்னதான் இருந்தாலும் ஒருவேளை காங்கிரஸ்கட்சி உங்களுடன் கூட்டணி அரசு அமைக்க முன்வந்து, தேர்தலில் கூட்டுச்சேர அழைத்தால் ஏற்பீர்களா? நிராகரிப்பீர்களா?

கரு: எனக்கு ஜோதிடத்தில் நம்பிக்கை கிடையாது. தேர்தல் வரட்டும். காங்கிரசுடன் உறவு இருக்காது என்பதுதான் எங்கள் கட்சியின் செயற்குழுவும், பொதுக்குழுவும் எடுத்துள்ள நிலை. இந்த முடிவை மாற்றுவது அவர்களால்தான் முடியும்.

(எ - 4)

# முறையாகப் பயின்றால் வருமானம் தேட முடியும்

## தையல் பயிற்சி ஆரம்ப விழாவில் உரை

கிளிநொச்சி, ஆக 9

தொழில் திணைக்களத்தினால் நடத்தப்படும் தையல் பயிற்சியை மாணவிகள் முறையாகப் பயில்வார்களேயானால் இதன் மூலம் மாதாந்தம் கணிசமான தொகையை வருமானமாக தேடக்கூடியவாய்ப்புக் கிடைக்கும்.

கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் நடைபெற்ற தையல் பயிற்சி ஆரம்ப விழாவில் கலந்து கொண்ட கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. குணராசா மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி தொழில் திணைக்கள தொழிலதிகாரி திரு. வி. எஸ். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) திரு. எஸ். அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அவர் உரை நிகழ்த்துகையில் வளர்ச்சி அடைய வேண்டிய பிரதேசமான பாரதிபுரம் கிராம சேவகர் பிரிவில் பெண்களின் எதிர்கால வாழ்வை வளம் படுத்தக்கூடிய இது போன்ற பயிற்சி நெறியை ஆரம்பிப்பது பற்றி மகிழ்சி அடையும் நான் பயிற்சியாளர்கள் நல்ல பலன் பெற வேண்டுமென வாழ்த்துகிறேன் என்றார்.

பாரதிபுரம் கிராம சேவகர் திரு. பொ. யோகேந்திரம் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வைபவத்தின் சிறப்பு விருந்தினராக கச்சேரி தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசா கலந்து கொண்டார்.

தொழிற் பயிற்சி ஆசிரியை செல்வி சி. மனோன்மணியம்மா நன்றியுரை கூறினார்.

(இ-76)

# இடமாற்றம்

பருத்தித்துறை, ஆக. 9

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத் தட்டெழுத்தாளர் திருமதி என். நவரத்தினம் யாழ். மேல்நீதிமன்றத்துக்கும், இலிகிதர் திருமதி எஸ். சிவசிதம்பரம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்துக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

யாழ் மேல்நீதிமன்ற தட்டெழுத்தாளர் திரு. எஸ். கோவிந்தராஜா, இலிகிதர் திரு. வி. கணேசமூர்த்தி ஆகியோர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளனர். (இ-118)

★ ★ ★

கொடிகாமம், ஆக, 9

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலிருந்து திரு. செ. சுப்பிரமணியம் மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (இ-75)

★ ★ ★

பச்சிலைப்பள்ளி, ஆக. 9

சாவகச்சேரி நகரசபையில் எழுதுநராகக்கடமையாற்றிய திரு. எஸ். கந்தசாமி புத்தூர் உபஅலுவலகத்திற்கும், யாழ் மாநகர சபையில் எழுதுநர்களாகக் கடமையாற்றிய திரு. த. நவரத்தினவேல், செல்வி எஸ். இரத்தினசிங்கம் ஆகியோரும் யாழ். அபிவிருத்திச் சபைத் தலைமையலுவகத்தில் கடமையாற்றிய திருமதி வி. முருகையாவுல் சாவகச்சேரி நகர சபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(இ-ரி)

★ ★ ★

மானிப்பாய், ஆக. 9

உடுவில் சமநலசேவைகள் நிலையத்துக்கு திருமதி ச. பத்மநாதன் விவசாயப் போதனாசிரியையாக முல்லைத்தீவில் இருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

(இ-90)

## பூஸா,....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக் கடிதத்திற்கு காந்தி சேவா சங்க செயலாளர் திரு. கதிர் பாரதிதாசன் அனுப்பி வைத்துள்ள பதிலில் "இலங்கை - இந்திய உடன்படிக்கையைக் கைதிகள் ஏற்றுக்கொள்வதாகதெரிவித்துபொது மன்னிப்புக்கு ஜனாதிபதியிடம் சத்தியக் கடதாசி சமர்பித்துள்ளனர்." என குறிப்பிட்டுள்ளார்

இக் கைதிகளின் பெயர்ப்பட்டியலைகாந்தி சேவா சங்கம் அண்மையில் இந்தியத் தூதுவரிடம் நேரடியாக கையளித்தது குறிப்பிடத்தக்கது. (இ-21)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. கபிரியல் பெனடிற்
[பெற்றோலிய கூட்டுத்தாபனம்]

மலர்வு: 17—2—1930
உதிர்வு: 9—8—1987

"ஓவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"
எங்களின் உள்ளத்தை விட்டு மறைக்கவும், மறக்கவும் இயலாத எங்கள் தந்தையின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

மனைவி, மகன்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

154 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

[ 5600 ]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல்.

**பொருள்:**

அவையிடத்தில் அஞ்சுகின்றவன் கற்ற நூல் பகைவரின் போர்க்களத்தில் அஞ்சுகின்ற பேடியின் கையில் ஏந்திய கூர்மையான வாள் போன்றது.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
09-08-1988 த. பெ. இல. 23


## பாடசாலை வளர்ச்சி

மாணவர்களின் கல்வித் தரம் முன்னேற்றம் அடைவதற்கு பாடசாலையின் தரம் அவசியம். பாடசாலையின் தரம் என்பது வெறும் கட்டடங்களால் உருவாகுவது அல்ல.

ஆசிரியர்கள் அக்கறையுடன் கற்பிப்பதிலும், மாணவர்கள் ஆர்வத்துடன் கற்பதிலும் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் கல்விக்கு உறுதுணையாக இருப்பதிலும் தான் ஒரு பாடசாலையின் கல்வித் தரம் உயர்வதும், தாழ்வதும் தங்கி உள்ளது.

கல்வியின் தரம் இன்னமும் பரீட்சைப் பெறுபேறுகளைக் கொண்டே நிர்ணயிக்கப் படுவதால்—

குறிப்பிட்ட ஒரு பாடசாலையில் ஜீ. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் எத்தனை மாணவர்கள் சித்தி அடைகிறார்கள், எத்தனை மாணவர்கள் விசேட தரங்களுடன் சித்தி அடைகிறார்கள் என்பதைக் கொண்டும்—

ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் தகுதி பெற்று எத்தனை பேர் பல்கலைக் கழக அனுமதி பெறுகிறார்கள். அவர்களில் எத்தனை பேர் மருத்துவம், பொறியியல் துறைகளுக்குச் சேர்க்கப்படுகிறார்கள் என்பதைக் கொண்டுமே—

அந்தப் பாடசாலையின் தரத்தை நிர்ணயிக்கும் போக்கு நம்மிடையே உண்டு.

பரீட்சைகளில் தவறினாலும் ஒழுக்கம், கட்டுப்பாடு, சமுதாய உணர்வு உடைய எதிர்கால நற்பிரசைகளை பாடசாலைகள் உருவாக்குகின்றனவா என்பதைப் பார்த்து ஒரு பாடசாலையின் தரத்தை நிர்ணயிக்கும் வழக்கம் இங்கு மிகக் குறைவு.

எது எப்படியானாலும், ஒரு பாடசாலை வளர்ச்சி அடைவதற்கும், கல்வித் தரத்தில் முன்னேற்றம் காண்பதற்கும் பெற்றோர்—ஆசிரியர் — மாணவர் — பழைய மாணவர் ஆகிய நாற்தரப்பாரினதும் இணைப்பும், ஒத்துழைப்பும், ஆதரவும் அவசியம்.

சிறிய பாடசாலை பெரிய கல்லூரி ஆவதற்கும், தரம் குன்றி இருந்த பாடசாலை முன்னணியில் திகழ்வதற்கும் நான்கு தரப்பினரின் கூட்டு முயற்சியும் உழைப்பும் தேவை.

பாடசாலைகளில் இடவசதி, தளபாட வசதி என்பன மிகவும் அவசியம். அவற்றை அரசாங்கம் செய்து தரும் என்று மட்டும் நம்பி இருக்கலாகாது. அந்தந்த ஊரில் உள்ளவர்கள், வசதி படைத்தவர்கள் பாடசாலைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது மிக அவசியம். கல்விக்குச் செலவு செய்யாத பணத்தை வேறு எதற்கும் செலவு செய்வதால் எந்தப் புண்ணியமும் வந்து சேராது. நிதிமிகுந்தவர் பொற்குவை கொடுக்கலாம்; அவ்வாறு இல்லாதவர்கள் இயன்றவரையில் காசுகளாவது கொடுக்கலாம்.

எங்கள் எதிர்காலச் சந்ததியினரை கல்வித்துறையில் முன்னேற்ற நாமே பாடுபட வேண்டும். எந்த விடயத்திலும் தன் கையே தனக்கு உதவி என்பதை மறந்துவிடலாகாது.

## மத்திய கிழக்குப் பிரச்சினையில் திருப்பம்:
# சுதந்திர பலஸ்தீன அரசை அங்கீகரிக்கத் தயார்;
# ஜோர்தான் மன்னர் திடீர் அறிவிப்பு!

அம்மான், ஆக. 8

வெளிநாட்டில் சுதந்திர பலஸ்தீன அரசு ஒன்று அமைக்கப்பட்டால் அதைஅங்கீகரிக்கத் தயாராக இருப்பதாக ஜோர்தான் மன்னர் ஹுசேன் அறிவித்திருக்கிறார்.

அம்மானில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஜோர்தான் மன்னர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஜோர்தான் மேற்குக் கரைப் பிரதேசத்தைச் சுதந்திர பலஸ்தீனமாக பிரகடனப் படுத்தி சுதந்திர அரசாங்கத்தை அறிவிக்கலாம் என்றும் ஜோர்தான் மன்னர் தெரிவித்தார்.

இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்டுள்ள மேற்குக் கரைப் பிரதேசம் ஜோர்தானின் கட்டுப்பாட்டுக்குள் இதுவரை இருந்து வந்தது. அதனை ஜோர்தான் அரசு அண்மையில் நீக்கிவிட்டது. மேற்குக் கரைப் பிரதேசத்தின் நிர்வாகத்தைப் பலஸ்தீன விடுதலை முன்னணி ஏற்றுக் கொள்வதற்காகவே இதனைச் செய்ததாக ஜோர்தான் மன்னர் அறிவித்தார்.

சுதந்திர பலஸ்தீன அரசாங்கத்தை அங்கீகரிக்கப் போவதாக ஜோர்தானின் அறிவிப்பு இஸ்ரேலுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

''ஜோர்தான் அபாயகரமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது''— என்று இஸ்ரேல் பிரதமர் தெரிவித்தார். (எ)

### ஜனாதிபதி ஆட்சி

புதுடில்லி, ஆ. 8

நாகலாந்தில் ஜனாதிபதி ஆட்சி நேற்றுப் பிரகடனப்படுத்தப்பட்டது.

மாநிலச் சட்டப் பேரவை கலைக்கப்பட்டது.

அங்கு ஆட்சி செய்த காங்கிரஸின் வாக்குப் பலம் குறைந்ததின் எதிரொலி இதுவாகும். (எ)

## பேர்பாக்ஸ் ஊழலில் ராஜீவுக்குச் சம்பந்தம்;
## சஞ்சய் மனைவி மேனகா காந்தி பேட்டி!

குளித்துறை, ஆக 8

காமராஜர் பிறந்த தினவிழாவில் கலந்து கொள்ள குமரி மாவட்டத்திற்கு வந்த அகில இந்திய ஜனதா பொதுச் செயலாளர் மேனகா காந்தி மார்த்தாண்டத்தில் ஜனதா கட்சி ஊழியர்களிடையேபேசினார்.

முன்னதாக மேனகா காந்தி நிருபர்களுக்கு பேட்டியளித்த விபரம் வருமாறு:

ஜனதா ஆளும் கர்நாடக மாநில அரசின் நிலைமை எங்ஙனம் உள்ளது?

கர்நாடகாவில் நிலவிய பிரச்சினை தற்போது முடிந்து விட்டது என நம்புகிறேன்.

அகில இந்திய அளவில் ஜனதா வளர்ச்சி எப்படி உள்ளது?

தற்போதுஜனதா நன்றாக வளர்ச்சியடைந்து வருகிறது. பெண்களும், இளைஞர்களும் கட்சிப் பணியாற்றி வருவதை முதன் முதலாக ஜனதாவில் காண்கிறேன். ஜனதா மேலும் வளர்ச்சியடைய புதிய கல்வித் திட்டம் உருவாக்க வேண்டும். ஐந்தாவது வகுப்பு முதல் தொழிற் கல்வி புகுத்தவேண்டும். கிராமப் புறங்களில் விவசாய கல்வியை அடிப்படையாகக் கொண்ட தொழிற் கல்வியை உருவாக்க வேண்டும். நஷ்டத்தில் ஓடும் பொது உடைமை களை தனியுடைமைகளாக மாற்றவேண்டும்.

குடும்ப பிரச்சினை காரணமாகத்தான் ஜனதாவிற்கு வந்தீர்களா?

இல்லை ஒரு லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட ராஸ்ட்ரீய சஞ்சய் மஞ்ச் கட்சியை ஜனதா கட்சியுடன் இணைத்து எதிர்க்கட்சிகளை ஒன்றுபடுத்தி வருகிறேன்.

பேர்பாக்ஸ் விவகாரத்தில் ராஜீவுக்கு பங்கு உண்டா?

பேர்பாக்ஸ் விவகாரத்தில் பிரதமர் ராஜீவ் ஈடுபட்டு ஏராளமான பணம் பெற்றுள்ளார். இது குறித்து அவர் ஆங்காங்கே பொய் சொல்லி வருகிறார்.

தமிழ்நாடு அரசியல் நிலைமை குறித்து தங்களின் கருத்து என்ன?

தமிழ்நாடு அரசியல் குறித்து தீர்க்கமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. ஜனதா தீவிரமாக பாடுபட்டு ஆட்சி மாற்றம் உருவாக்க விரும்புகிறோம்.

தற்போது அலகாபாத் தொகுதியில் பொது வேட்பாளராக வி. பி. சிங் நிறுத்தப்பட்டது போல வரும் நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா முழுவதும் எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து பொது வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்களா?

அதற்காக தீவிரமாக முயற்சி செய்து வருகிறோம்.

இவ்வாறு மேனகா காந்தி பதிலளித்தார். (எ-4)

## பங்களாதேஷில் படகு கவிழ்ந்து 30 பேர் பலி!

டாக்கா, ஆக. 8

பங்களாதேஷில் யமுனை நதியில் 150 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த 3 படகுகள் கவிழ்ந்தன.

பெரும்பாலானவர்கள் உயிர் தப்பிக் கரை சேர்ந்தனர். 30 பேர் பற்றிய தகவல் எதுவும் இல்லை.

ஒன்றரை நிமிடங்கள் மட்டுமே இடம் பெற்ற பூகம்பம் காரணமாக யமுனையில் பிரவாகம் ஏற்பட்டதால் மூன்று படகுகளும் கவிழ்ந்தன என்று அறிவிக்கப்பட்டது. (எ)

# வளைகுடா யுத்த நிறுத்தத் திகதி 24 மணித்தியாலத்தில் அறிவிப்பு

### ஐ. நா. செயலாளர்

ஐ. நா. ஆக 8

சுமார் 10 லட்சம் பேரைப் பலிகொண்ட எட்டு ஆண்டு கால வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான யுத்த நிறுத்த திகதியை அடுத்த 24 மணித்தியாலங்களில் தெரிவிப்பதாக ஐ.நா. பொதுச் செயலாளர் பெரஸ்டி குயிலர் அறிவித்திருக்கிறார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டத்தின் முடிவில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

வளைகுடா யுத்த நிறுத்தம் பற்றி இதுவரை நடந்த பேச்சுக்களின் விபரங்களை பொதுச் செயலாளர், பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் விவரித்தார்.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் ஐ நா மேற்பார்வையில் ஈராக்குடன் நேருக்கு நேர் பேச்சுவார்த்தைகளை நடத்த ஈரான் அரசு ஒப்புக்கொண்டு உள்ளது என்ற தகவலையும் பொதுச் செயலாளர் வெளியிட்டார்.

★ யுத்தக் கைதிகளை இரு தரப்பினரும் விடுதலை செய்வது.

★ யுத்த முனையில் இருந்து துருப்புக்களை விலக்கிக் கொள்ளுவது.

★ எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் வளைகுடா யுத்தத்தை யார் ஆரம்பித்தது என்பதைக் கண்டு பிடிக்கும் விசாரணையை நடத்துவது.

—இவ்விஷயங்கள் குறித்தே நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும் பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் தெரிவித்தார். (எ)

### மலேசிய நீதியரசர் பதவி நீக்கம்

கோலாலம்பூர் ஆக-8

மலேசியாவின் பிரதம நீதியரசர் துன் சாலிஹ் பதவி விலக்கப்பட்டார்.

சர்வதேச விசாரணைக் குழு ஒன்று அவர் மீதான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்தது. அதன் பின்னரே அவர் பதவி நீக்கஞ் செய்யப்பட்டார் என்று அரசு அறிவித்தது. அந்த விசாரணைக் குழுவில் இலங்கைப் பிரதம நீதியரசரும் ஒருவர். (எ)

# அதிபர்கள் பிரச்சினை பற்றி
# கல்வி அமைச்சுடன் பேச்சு

### வித்தியாலய அதிபர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

காங்கேசன்துறை, ஆக 9

அதிபர்களின் பதவி உயர்வு, சம்பளம், நியமனம், இடமாற்றம் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகள் குறித்து கல்வி அமைச்சருடன் பேச்சு நடத்துவது என இலங்கை வித்தியாலய அதிபர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி சங்கத்தின் கூட்டம் சங்கத் தலைவர் திரு. க. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற சமயமே இப்படி முடிவு செய்யப்பட்டது.

கூட்ட ஆரம்பத்தில் 1986, 87 ஆண்டுகளின் அசம்பாவிதங்களின் போது மரணமான அதிபர்களுக்கு ஐந்து நிமிடம் அஞ்சலி செலுத்தப் பட்டது.

சங்கத்தின் தலைவர் திரு. க. சோமசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:

ஜி சி.ஈ சாதாரண தர விசேட பரீட்சையின் போது மாணவர்கள் அடையாள கார்ட்டுக்குப் பதிலாக புகைப்படப் பிரதியில் கல்வி அதிபதியின் சிபார்சுடன் தோற்ற அனுமதிக்கும் படி எம் சங்கம் விடுத்த கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்தியதுக்காக கல்வி அதிபதிக்கு நன்றி கூற விரும்புகிறோம்.

எம் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. பதவிஉயர்வு, நியமனம், இடமாற்றம் ஒரு திட்டவரம்பின்றி செய்யப்படுகின்றன. இந் நிலைமாற வேண்டியது அவசியம்.

இப்படி அவர் கூறினார். (இ-68)

### வேட்டைத் திருவிழா

காங்கேசன்துறை, ஆக.9

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவ தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழா நடைபெறவிருக்கிறது.

மேற்கு வாசலில்உள்ள வேட்டை மண்டபத்தில் வேட்டை உற்சவம் நடைபெற்று பின் எட்டுக்குடியேசலும், இரவு பூந்தண்டிகையும் இடம் பெறும்

நாளை பகல் பெரிய சப்பரத் திருவிழா நடைபெறும். (இ-68)

### அரியாலை மகாமாரி அம்பாள் தேர்

அரியாலை பிரப்பங்குளம் அருள் மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த மாசம் 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இந்த மகோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். (இ)

### இலட்சார்ச்சனை விழா

நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலட்சார்ச்சனை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுகின்றது.

தினசரி இலட்சார்ச்சனை காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்கும் ஆரம்பமாகும்.

இக்கிரியைகள் யாவற்றையும் இ ஸ்ரீதரக் குருக்கள் நடத்தி வைப்பார். (இ-5)

## வடமராட்சி மீனவர்கள் உண்ணாவிரதம் இருப்பர்

### பிரசைகள் குழுக்களிடம் மகஜர்

வடமராட்சி, ஆக. 9

வடமராட்சி மீனவர் குடும்பங்கள் மீன்பிடிக் கட்டுப்பாடு நீக்கப்படும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்துள்ளன.

வல்வை பருத்தித்துறை பிரசைகள் குழுக்களிடம் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 5-00 மணிக்குப் பின்பே மீன்பிடிக்க தற்போது அனுமதி வழங்கப்படுவதால மீனவர்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

தமது உண்ணாவிரதப் போராட்டம் குறித்து மீனவர்கள் பிரசைகள் குழுக்களிடம் மகஜர் கொடுத்துள்ளனர்.

## இரணைதீவு - நாச்சிக்குடா படகுப் பயணிகள் அச்சம்

கோப்பாய், ஆக 9

இரணை தீவிலிருந்து நாச்சிக்குடா வரையிலான கடற்பாதையில் பகல் வேளைகளில் படகுகளில் பிரயாணம செய்வதற்கு இரணைதீவு மக்கள் தயங்குகின்றனர்.

இப்பகுதி கடற் பிரதேசங்களில் மக்கள் செல்லும் படகுகள் சேதத்திற்குஉள்ளாகலாம்என அச்சம் நிலவுவதே தற்குக் காரணம்.

ஒரு சிலர் சிறுகாயங்களுடன் தப்பியுள்ளனர் என்று இப்பகுதியில் கடமைபுரியும் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். (இ-72)

## மக்கள் மத்தியில் சாந்தி, சமாதானம் நிலவ இறை அருள் வேண்டுவோம்

### பாதயாத்திரை பூர்த்தி வைபவத்தில் உரை

சாவகச்சேரி, ஆக 9

பாதயாத்திரை பண்டைக்காலம் தொட்டே பக்தகோடிகளால் நடைமுறைப் படுத்தப் பட்ட ஒரு பெரும்பணி எமது சமயாசாரியர்களால் கூடநடத்தப்பட்ட பக்தி மார்க்கம். இறை புகழ் பாடிப் போற்றிப் பரவ பிரார்த்தனை செய்ய பாதயாத்திரை பெரும் சாதனமாகும். மக்கள் மத்தியில் சாந்தி, சமாதானம், அன்பு நிலைபெற இறை அருளை வேண்டுவோம்.

தொடர்ந்து 14 தினங்கள் நடைபெற்ற பாதயாத்திரை கடந்த சனிக்கிழமை நிறைவேறிய போது தொண்டர்களுக்கு சாவகச்சேரி வீர பத்திரர் ஆலயத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் தலைமை வகித்த நீதிபதி எம். திருநாவுக்கரசு மேற் கண்டவாறு கூறினார்.

ஆத்மஜோதி ஆசிரியரும் யாத்திரைக் குழுவின் தலைவருமான திரு. நா. முத்தையா உரையாற்றுகையில்:

14 நாள் பாதயாத்திரையில் 2 நாள் ஊரடங்கு அமுல் நடத்தப்பட்டது- அப்படியிருந்தும் எமது பாதயாத்திரை தொடர்ந்தது. இந்த நாட்களில் ஓர் இராணுவ வீரரைக் கூட நாங்கள் காணவில்லை

அவன் அருளாலே அவன் தாள் வணங்கினோம்.

இன்றைய நெருக்கடியிலும் கூட ஆத்மீக நெறியில் இருந்து தமிழர் ஒதுங்கிக் கொள்ள வில்லை. மேலை நாடுகளை [illegible] நம் நாட்டுத் தமிழ் [illegible] ...க்க நெறிகள் மிகையாகக் காணப்படுகின்றன.

இப்படி அவர் கூறினார்.

திரு. சிவமகாலிங்கம் வித்துவான் மு. கந்தையா, திரு. ஆர் டி. சுப்பிரமணியம் ஆகியோர் திரு. முத்தையாவின் பணியைபாராட்டி உரையாற்றினர்.

இசைப் புலவர் திரு. சி. செல்லத்துரையின் பக்திப் பாடல்களும் இடம்பெற்றன. (இ-31)

### மரணமானார்

வடமராட்சி, ஆக 9

வடமராட்சியின் வைத்தியசாலை ஒன்றில் ஊழியராகப் பணி புரிந்த [illegible] அகத்திய நால் [illegible] மரணமானார். (இ-160)

# வெற்றி - தோல்வி அல்ல; உழைப்பே வாழ்க்கையை நிர்ணயிக்கிறது

வெற்றி தோல்வியல்ல, உழைப்புத்தான் வாழ்க்கையை நிர்ணயிக்கிறது.

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா இப்படிக் கூறினார்.

ஜீவசக்தி நூல் வெளியீட்டுவிழா அண்மையில் கலாநிதி சபா ஜெயராசா தலைமையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

திரு. கே. நாகேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார். லெப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் ஆசியுரை வழங்கினார்.

திரு டொமினிக் ஜீவா கருத்துரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

அண்மையில் கொழும்பில் தமிழ், சிங்கள, முஸ்லிம், ஐரோப்பிய நண்பர்கள் கலந்து கொண்ட ஒரு கலந்துரையாடலில் ஓர் ஐரோப்பிய நண்பர் கேட்டார். யாழ்ப்பாணத்தில் இந்தக் குழப்பமான சூழ்நிலையிலும், சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இது எவ்வாறுசாத்தியம்? உங்களால் இவற்றை எவ்வாறு சாதிக்க முடிகின்றது?

இரண்டாம் உலகப் போரில் பிரித்தானியா மீது குண்டுகள் பொழியப்பட்டன. அப்பொழுதும் அங்கு மக்கள் வாழ்ந்து கொண்டுதான் இருந்தார்கள். ஜப்பானில் ஹிரோஷிமா நாகசாகி நகரங்கள் மீது அணு குண்டுகள் போடப்பட்டன. அப்பொழுதும் மக்கள் வாழ்ந்து கொண்டுதான் இருந்தார்கள்.

இன்று இச்சூழ்நிலையிலும் நாம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றோம். எமது வாழ்வின் வெளிப்பாடுதான் எமது ஜீவசக்தி.

இப்படி அவர் கூறினார்.

யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு.சி.வி.கே. சிவஞானம் நூலை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்துகையில் இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில் இருந்து இலங்கையை ஆண்டு வந்த பேரினவாத அரசுகள் பல் இன பல் மொழி பல் சமய, சார்பான மக்கள் வாழ்கின்றார்கள் என்பதை கருத்தில் கொள்ளாமல் தவறான வழியில் தமது ஆட்சியை அமைத்து வந்தார்கள்.

இன்றே நாளையோ தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் ஆக்குறைந்தது சுயநிர்ணய உரிமையை பெற்று ஆட்சியை அமைக்கும் போது ஏனைய இன மக்கள் சிறுபான்மையினராக வரும் நிலையில் பேரினவாத அரசுகள் விட்ட தவறுகளை நாம் செய்யக் கூடாது என்றார்.

பேராசிரியர் சிவத்தம்பி, திருமதி கோகிலா மகேந்திரன், திரு. செம்பியன் செல்வன், திரு ஜெயராஜா ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

நூல் ஆசிரியர் நன்றியுரை வழங்கினார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

✶ சேட்டிங்ஸ் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :–: யாழ்நகர்.



# உதயன்

09 - 08 - 1988 செவ்வாய்க்கிழமை



திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுர ✶ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :–: யாழ்நகர்.


## வீட்டிலிருந்து....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சிரோமணி விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணைகளின்போது பின்வரும் தகவல்கள் வெளிவந்தன.

மரணமான இராஜேஸ்வரன் யாழ்ப்பாணம் கோட்டையிலேயே தங்கியிருந்து கடமையாற்றுபவர்.

இடையிடையே மட்டுமே தொல்புரத்தில் உள்ள தமது வீட்டுக்குச் சென்று வருபவர்.

சம்பவதினத்தில் கடமையின் நிமித்தம் சுளிபுரம் சென்றூர். யாழ்ப்பாணம் திரும்பி வரும் வழியில் தொல்புரத்தில் உள்ள தமது வீட்டிற்கும் சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தார்.

பொலீஸ் பகுதிக்குச் சொந்தமான காரை பொலீஸ் பகுதிச் சாரதியான திரு. போல் என்பவர் ஓட்டி வந்தார்.

வீட்டிலிருந்து புறப்பட்டுச் சுமார் 50 யார் தாண்டிய சமயம் இனந்தெரியாதோர் காரை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இருவரும் அந்த இடத்திலேயே மரணமானுர்கள்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் எவரும் இல்லை என்று சொல்லப்பட்டது.

விசாரணை இறுதியில் நீதிபதி துப்பாக்கிச் சூட்டினுல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

(அ-க-9)

## யாழ் நகர கொமாண்டர்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பமானது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணி பலாலி வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ் ரயில்நிலைய அமைதிப்படை முகாமை வந்தடைந்தது.

அங்கு வைத்து பல்கலைக்கழக மாணவர்களைச் சந்தித்த அந்த முகாம் பொறுப்பதிகாரி இதுபற்றி யாழ் நகரக் கொமாண்டருடன் தொடர்பு கொள்ளும்படி தெரிவித்தாராம்.

இதனையடுத்துபேரணி யாழ் நகரக் கொமாண்டர் அலுவலகத்தை நோக்கி நகர்ந்தது.

நண்பகல் சுமார் 12 மணிக்கு நகரக் கொமாண்டர் அலுவலகத்தை பேரணி சென்றடைந்தது. அங்கு அலுவலக வாசலில் மறியல் இடம்பெற்றது.

### பேசுவதற்கு இணக்கம்

மறியலில் ஈடுபட்ட மாணவர்கள் கோஷங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாணவர்கள் அனைவரையும் கலைந்து செல்லும்படியும், அவ்வாறு செய்யும் பட்சத்தில் அமைதிப்படை அதிகாரிகள் மாணவர் பிரதிநிதிகளுடன் பேச இணங்கியுள்ளதாகவும் அவ்வேளையில் அறிவிக்கப்பட்டது.

ஆனால் இதற்கு ஆட்சேபனையை தெரிவித்த மாணவர்கள், கலைந்து செல்ல மறுத்தனர்.

மாணவர் பிரதிநிதிகளுடன் மட்டும் பேச்சு நடத்தாமல், நகரக் கொமாண்டர் தமது அலுவலகத்தை விட்டு வெளியே வந்து பேரணியில் உள்ள அனைத்து மாணவர்களுடனும் பேச்சு நடத்த வேண்டும் எனக் கோரினர்.

இதனை ஏற்றுகொள்ளாத அமைதிப்படை அதிகாரிகள், எவரும் அவ்வாறு வெளியே வந்து பேச்சு நடத்த மாட்டார்கள் என கண்டிப்புடன் எடுத்துரைத்தனர்.

இதற்கிடையில் மறியலில் ஈடுபட்ட மாணவரை அமைதிப்படை அதிகாரி ஒருவர் படம் பிடித்துக் கொண்டார்.

பின்னர் மாணவ பிரதிநிதிகள் ஐவர் நகர கொமாண்டர் அலுவலகத்தினுள் அழைக்கப்பட்டனர். யாழ் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் காலோனுடன் அவர்கள் பேசினர்.

கைது செய்யப்பட்ட மாணவன், தவராசாவை விடுதலை செய்யும்படி மாணவர்கள் வற்புறுத்தினர்.

அதற்கு பிரிகேடியர் காலோன் பதிலளித்தார்.

"பிரஸ்தாப மாணவன் போராளி இயக்கம் ஒன்றின் அங்கத்தவராக இருந்தவர் என்பதற்கான சாட்சியங்கள் அமைதிப்படையினருக்குக் கிடைத்திருக்கின்றன. அவர் பற்றிய பூர்வாங்க விசாரணைகள் காங்கேசன்துறை முகாமில் நடைபெற்று வருகின்றன அங்கு நடைபெறும் விசாரணைக்கு நான்பொறுப்பாளியல்ல. ஆனலும் கூடிய விரைவில் இந்த விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுப்பேன். இப்படி பிரிகேடியர் கூறியதாகத்தெரியவருகிறது.

பேரணிக்கு வந்த மாணவர்களைப் படை அதிகாரி படம் எடுத்த நடவடிக்கைக்கு மாணவர் பிரதிநிதிகள் ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்து போட்டோ பிடித்த அமைதிப்படை அதிகாரி அங்கு அழைக்கப்பட்டார். அவரது கமராவிலிருந்த படச்சுருளை வாங்கிய அமைதிப்படை அதிகாரி ஒருவர் அதனை மாணவர்களிடமே கொடுத்தார்.

பேச்சுவார்த்தை முடிவில்–

புதன்கிழமை மாலை 4 மணிக்கு முன்னுல் பிரஸ்தாப மாணவன் விடுவிக்கப்படாவிடில் தமதுசாத்வீகப்போராட்டம் விரிவுபடுத்தப்படும் என்றும், அதுவரையில் விரிவுரைகளைத் தாம் பகிஷ்கரிக்க உத்தேசித்துள்ளதாகவும் மாணவர்கள் அமைதிப்படை அதிகாரியிடம் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

இறுதியில் மாணவர்கள் மீண்டும் பேரணியாக கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, பிறவுண் வீதி வழியாக பல்கலைக் கழகத்தை அடைந்தனர்.

(உ-க-9)

## திருமலைக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கச் செய்யமுடியவில்லை என்றும் கூறப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் திரியாய் அன்னையர் முன்னணியினர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடாத்தி முகாமிற்கு முன்னுல் மறியல் போராட்டமும் செய்தனர்.

திரியாய் கிராமத்தில் கைது செய்யப்பட்டவர்களில் 22பேர் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது.

கடந்த 4ஆம் திகதி நிலாவெளியிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும், மறியல் போராட்டமும் இடம்பெற்றன.

கடந்த ஞாயிறன்று இக்பால் நகர் என்னும் முஸ்லீம் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டு பெரும் எண்ணிக்கையானேர் கைதுசெய்யப்பட்டனர்.

திங்கட்கிழமை காலையில் இக்பால் நகர முஸ்லீம் பெண்கள் மறியல் போராட்டம் செய்தனர். இதனையடுத்து அப்பகுதியில் கைதானேரில் நால்வரைத் தவிர ஏனையோர் விடுதலைசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் படையினரின் தேடுதல் வேட்டையும், சோதனைகளும், பன்குளம் பகுதியிலும் பரவலாக இடம்பெற்று வருகின்றதாக அப்பகுதி மக்கள் பிரசைகள் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

உ–150

## 154 விடுதலைப் புலி---

ததே.

தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 12 அலுவலகங்கள்பொலீஸாரால்மூடப்பட்டனஎன்று இலங்கை வானெலியும் நேற்று இரவு அறிவித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் கைதுசெய்யப்பட்ட சம்பவம்பற்றிகருத்து வெளியிட தமிழ் நாட்டுப் பொலீஸார் மறுத்துவிட்டனர் என்றும் –

இந்த நடவடிக்கை சம்பந்தமாக விரைவில் முழுவிவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று மட்டும் தமிழ்நாடு பொலிஸார் தெரிவித்தனர் என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

இதே சமயம் தெற்காசிய நாடுகள் ஒத்துழைப்பு மன்றத்தின் (சார்க்) பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பான பரஸ்பர ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட்ட கையோடு இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

நேபாளம், பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், இலங்கை, மாலைதீவு ஆகிய ஏழு நாடுகள் 'சார்க்' அமைப்பில் அங்கம்வகிக்கின்றன.

இவற்றுக்கிடையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான பரஸ்பர ஒப்பந்தம் ஒன்று சடந்த வாரம் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

இதன்படி சார்க் அங்கத்துவ நாடு ஒன்றின் அரசுக்கு எதிரான பயங்கரவாத குழுக்கள் மற்ருெரு அங்கத்துவ நாட்டில் இயங்குவது தடைசெய்யப் பட்டிருக்கிறது. அப்படி தமக்கு எதிராக இயங்கும் குழுக்களைத் தமது நாட்டுக்கு நாடு கடத்தும்படி ஓர் அங்கத்துவ நாடு மற்றைய அங்கத்துவநாட்டைக்கேட்க முடியும்.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதா இல்லையா என்பது குறித்து இந்தியத் தரப்பில் இழுபறிநிலை இருந்துவந்தது.

இறுதியாக, கடந்த வெள்ளிக்கிழமை ஆறுவது நாடாக இலங்கையும் —

கடந்த சனிக்கிழமை ஏழாவதாக இந்தியாவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட கையோடு தமிழ்நாட்டில் தங்கியிருந்த விடுதலைப் புலிகளை இந்தியா கைது செய்திருக்கிறது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சண்முகம் ரஞ்சனிதேவி

தோற்றம்: 8- 6- 1957 — மறைவு: 10- 7- 1988

பாசமலராய மலர்ந்து அறிவால் எங்கும் மணம் வீசி அன்பால், பண்பால் உரிய நற்குணத்தால் எல்லோர் உள்ளத்திலும் உறைந்து திடீரென உதிர்ந்த மலராகி விட்ட எமது அன்புச் செல்வமே! கூவ இருந்த குயில் கூவாமல் போனது பால் கோடி அழகு மலர் இடைநடுவில் வாடுதல் போல் ஆவல் நிறைந்த என் செல்வமே இடை நடுவில் போனுயே.

கட்டிய கணவரைக் கரைய
வைத்தாயம்மா
பால் மணம் மாரு நீ பெற்ற செல்வங்களின்
பாசத்தை மறைய வைத்தாயம்மா
தந்தை, தாய் அழுத கண்ணீர்
ஆருய் பெருகுதம்மா
உடன் பிறந்தோர் எண்ணத்தைக்
கரைய வைத்தாயம்மா
என்றும் உன் நினைவு எமது
நெஞ்சை விட்டகலாது
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உன் நினைவால் வாடும்:
கணவர், பிள்ளைகள், தந்தை, தாய்,
சகோதரர், உற்ருர், உறவினர்கள்

தகவல்:
நா. தில்லைநாதன்
30/2, சீனிவாசம் ரோட்,
கொட்டடி.

(5641)

## 2 கோடி ரூபா - - - - -

களில் கட்டிமுடித்துத் தர "டொக்யாட்" நிறுவனம் உறுதி வழங்கியுள்ளது.

தற்போது தீவுப்பகுதிகளுக்கான போக்குவரத்துச் சேவைகள் பெரும் சிரமத்தின் மத்தியில் நடைபெற்று வருகின்றன.

நாலு சிறிய 'லோஞ்'சுகள் இதுவரை சேவையில் ஈடுபட்டு வந்தன. அவற்றில் ஒன்று முற்ருகப் பாவிக்கமுடியாத நிலையில் உள்ளது. ஏனைய மூன்றும் ஒழுங்கான நிலையில் இல்லை.

புதிய மோட்டார் 'லோஞ்'சுகளும் சேவையில் ஈடுபடத்தொடங்கினுல், தீவுப்பகுதி மக்களின் கடற் போக்குவரத்துப் பிரச்சினை ஓரளவு தீர்ந்துவிடும் என்றும் அரச அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(உ-க)

## கைதிகள்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் இந்த இரகசிய இயக்கத்தின் ஒரு கட்டமாகும்.

அச்சம்பவத்தில் அரசியல் கைதிகளைத்தாக்குவதற்காக சமூக விரோத சக்திகளுக்கும் காடையர்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

அச்சம்பவத்தில் காயமடைந்த அரசியல்கைதிகள் நியூமகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். அங்கு மீண்டும் அவர்கள் தாக்கப்பட்டனர். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்படவில்லை.

—இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

(உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### ப. யோண் இராஜதுரை

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு. ப. யோண் இராஜதுரை (பொலீஸ் பென்சனியர்) காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திருமதி மேரி மாகிறேற் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற டாக்டர் யோண், செல்வராணி, அஞ்சலா (பெரும்பாக உத்தியோகஸ்தர் சமநலச் சேவைத் திணைக்களம், நல்லூர்), புவிராஜசிங்கம் (பிரான்ஸ்), புஸ்பநாதன் (வைத்திய கலாநிதி லண்டன்), யோகநாதன் ஆகியோரின் அன்புத் தாப்பனும் திருமதி இந்திராணி யோண், திரு. மரியநாயகம் (உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் கந்தானை) திருமதி இராஜேஸ்வரி புவிராஜசிங்கம், திருமதி ஜெகச்சோதி புஸ்பநாதன் (லண்டன்), திருமதி. செல்வராணி யோகநாதன் ஆகியோரின் மாமனும் செரின், செரோன் மனோஜன், ரோசான், ரெஷிட்டா, பிரஷாந், பிரதீப், எழிலி, தணிக்கா, சுரேஸ்குமார், சுபஷினி ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லமாகிய 'பிளசய்ஸ்'' உயரப்புலம் ஆனைக்கோட்டையில் இருந்து நல்லடக்கத்துக்காக ஆனைக்கோட்டை சேமக்காலைக்கு 9-8 88 இன்று செவ்வாய்க்கிழமை மு. ப. 10 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(5634)

### V. போல்

(பொலிஸ் உத்தியோகத்தர்)

V. போல் 7-8-88 அன்று அகால மரணமானுர். இவர் சந்திராவின் அன்புக் கணவரும் சுவைடா, ஜெஸ்ருணுவின் அன்புத் தந்தையும். ஆ. வரப்பிரகாசம் (பொன்னுத்துரை), ரோசாவின் அன்பு மகனும் P. அந்தோனிப்பிள்ளை (ராசு) P. அந்தோனிப்பிள்ளை (சின்னன்) திருமதி. செ. அமிர்தம்மா, செ வி P. றெஜீனுவின் அன்புச் சகோதரனும் திரு. I. S. செல்வநாயகம் (ராஜ் கோபால்ஸ் யாழ்ப்பாணம்) திருமதி A. சரசுவதி திருமதி A. அமிர்தநாயகி ஆகியோரின் மைத்துனரும் இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் சி. ஞானப்பிரகாசம் குணபூசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், S A. எட்வேட்ஸி (விசாரணை அதிகாரி வ பி. போ. சபை), திருமதி மகேஸ்வரி, எட்வேட்ஸி (ஆசிரியை, றோ. கத்தோலிக்க பாடசாலை ஆனைக்கோட்டை), S. சூசைப்பிள்ளை (இளைப்பாறிய துறைமுக அதிகாரி), திருமதி திரேசா தங்கராணி (றஞ்சிதம்) A. சூசைப்பிள்ளை (Ceynor காரைநகர்), திருமதி லில்லிமலர் (கிளி), G. அருமைநாயகம் (சாலை பரிசோதகர் வ. பி போ. சபை காரைநகர்), திருமதி பிளசி, செல்வி G ஞானசோதி ஆகியோரின் மைத்துனரும் றிபன்க் (சூரியன்) (டென்மார்க்), அன்ரன் டோமினிக் (சந்திரன்) (டுபாய்), அன்ரன் அல்பியூஸ் (இந்தியா), யூட்டி, சுலேக்கா, நிர்மலா, கலா, குணு, பிரியா, டோட்டி, ஜடா, கமில்ரன், ஜெறி, சணு, அருண் ஆகியோரின் சித்தப்பாவும் அமிர்தசொரூபன், அமிர்தசெல்வன், அமிர்தநிரஞ்சன் ஆகியோரின் மாமனும், M. பேரின்பநாயகம் (இளைப்பாறிய பொலிஸ் பரிசோதகர்) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் 9-8-88 செவ்வாய் பிற்பகல் 3 மணி அளவில் அவரின் இல்லத்தில் இருந்து ஆனைக்கோட்டை புனித மரியாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவியும் பிள்ளைகளும்.
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

(5637)

## 7ஆம் மாத கண்ணீர் பூக்கள்

### மனக்கோயில் தீபங்கள்



**நாதன்**
வீர ஜனனம்: 1952 - 05 - 30
வீர மரணம்: 1988 - 01 - 16

**குட்டி**
வீர ஜனனம்: 1966 - 12 - 27
வீர மரணம்: 1987 - 09 - 10

**சலாம்**
வீர மரணம்: 1988 - 06 - 02

"விடுதலை காணவென்று திரமுடன் செயற்பட்ட
வேங்கையே "அண்ணு" மண்ணினை மீட்டிட
மரணத்தை தழுவிய சகோதரனே
செருக்களம் தன்னில் போராட வந்த
அன்னியனுக்கு உன் பொன்னுன உடலை
உவந்து நின்ற வீரனே"

விடுதலைப் பாதையில் விளக்கொளி வீசு நாளை
உனது கனவு நனவாகும் நாளை தமிழ்ஈழம்
மலரும் நிட்சயம் அண்ணு உன் தம்பிகளும்
உன் பாதையில் வந்தனரே அழைத்திரா
அன்புடனே விண்ணுலகம்.

அன்பான உள்ளங்களே!
நினைவின் அலைகள் ஓய்வது இல்லை காலம் கரையும்
ஆனுல் கனவுகள் தொடரும். மரணம்
யாவர்க்கும் வாழ்க்கையின் முடிவே
உந்தன் மரணமே புதுவை ஜெனனம்
உனது ஆழப்பதிந்த லட்சிய தடங்கள்
ஆயிரம் கால்கள் தொடருமென அறிவாய்.
அதனுல் நீங்கள் நிட்சயம்
பிறப்பீர்கள் தமிழ்ஈழ மண்ணில்.

அன்புடன் நினைவு கூரும்
அன்பான அம்மா, தங்கைகள்,
உறவினர், நண்பர்கள்.

(5639)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிடெட் ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 09-08-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthavan Publications (pvt) Ltd 292/2 Navalar Road. Jaffna on Tuesday 9th August 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org